விலை சதம் 50

சுவையான ஐஸ்கிறீம் வகை
களுக்கும் கோழிப் புரியாணி
நூடில்ஸ், பொம்பே சுவிட்ஸ்
றிக்கோ பிடா
வகைகளுக்கும்
றிக்கோஹோட்டல்
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 464

★

# ஈழநாடு
## வார மலர்
* THE EELANADU VARAMALAR *

பக்கங்கள்—8

'மில்க்வைற் செய்தி'
இதழ்—23
பொன் விழா சிறப்பு மலர்
100 மில்க்வைற் நீலசோப்
அல்லது 25 பார் சோப்
அல்லது 25 நீம் வாசனை
சோப் அல்லது 25 மெடிக்
கேட்டட் சோப் அல்லது
25 மில்க்வைற் சலவைட்பவு
டர் மேலுறைகளை அனுப்பி
பெற்றுக்கொள்ளுங்கள்
மில்க்வைற் சவர்க்காரத்
தொழிலகம்,
த. பெ. எண் 77
யாழ்ப்பாணம்

மலர் 19 | ஐப்பசி 28 | ஜுலக்ஜ் 1 | ஞாயிற்றுக்கிழமை | [13—11—77] | இதழ் 273

# யாழ். ஆஸ்பத்திரியில் துப்பாக்கிச் சூடு!
## நோயாளி மயிரிழையில் உயிர் தப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வார்ட்டில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளி ஒருவர் சிறு காயத்துடன் மயிரிழையில் உயிர் தப்பினர்.

நேற்று முன்தினம் இரவு சுமார் எட்டரை மணியளவில் யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குள் நுழைந்த மூவர் 15ம் வார்ட்டின் ஜன்னல் கண்ணடியை உடைத்து, நோயாளி ஒருவரை நோக்கித் துப்பாக்கியால் சுட்டதாகவும், அந்த நோயாளி சாதுரியமாகத் தம்மைக் காப்பாற்றிக்கொண்டதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

துப்பாக்கிக்காரர்கள், ஆஸ்பத்திரியின் மதில் மேலாகவே ஆஸ்பத்திரிக்குள் நுழைந்துள்ளனரெனப் பொலிசார் நம்புகின்றனர்.

கையில் வாள் வெட்டுக் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த பொன்னுக்குட்டி மணி என்பவர் மீதே இத்துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகவும், இத்துப்பாக்கிச்சூட்டினுல் அவருக்குச் சிறு காயமேற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மணியின் சகோதரரான பிரான்ஸிஸ் என்பவரும் காலில் வாள்வெட்டுக் காயங்களுடன் ஆஸபத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இருவருக்கும் இப்போது பொலிஸ் காவல் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக எவரும் கைதுசெய்யப்படவில்லை. (இ)

### புலோலி வங்கிக்கொள்ளை: ஒருவர் கைது

[யாழ்ப்பாணம்]

புலோலி வங்கிக் கொள்ளை தொடர்பான சந்தேகத்தின்

(6ம் பக்கம் பார்க்க)

### மும்மொழிகளிலும்
## தேர்ச்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முதலிடம்
### ஜே. ஆர். திட்டம்

(கொழும்பு

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கே அரசாங்க, கூட்டுத்தாபனங்களின் வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை வழங்கப்படவுள்ளது.

பிரதமர் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனுவின் இத்திட்டம் அடுத்த ஜனரி முதல் அமுலுக்கு வரும் எனத் தெரிகிறது.

அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்களின் பதவி உயர்வுகளிலும் மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்களுக்கே முதலிடம் அளிக்கப்படுமென்று தெரியவருகிறது. (இ)

## அரசியல் காரணங்களுக்காக ஆசிரியர் இடமாற்றம்
### வவனியா எம்.பி. குற்றச்சாட்டு

[கொழும்பு]

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் வவனியா மாவட்டத்தில் மட்டும் 45 ஆசிரியர்கள் அரசியல் காரணங்களுக்காக இடமாற்றப்பட்டுள்ளனர். கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில்கூட இவ்வளவு மோச

(6-ம் பக்கம் பார்க்க)

## இ.போ.ச. தலைமையகத்தில் நீண்ட பெண்கள் 'கியூ'

(கொழும்பு)

இ. போ. ச. தலைமைக் காரியாலயத்திற்கு முன்னுல் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நூற்றுக்கணக்கான யுவதிகள் 'கியூ'வில் காணப்படுகிருர்கள்.

பஸ் கண்டக்டர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களே இக்'கியூ'வில் நிற்கின்றனர்.

க. பொ. த. சாதாரணத் தகைமையுடைய, 18க்கும் 30க்கும் இடைப்பட்ட வயதை உடையவர்களான இப்பெண்கள் ஆண்களைப்போல் தாமும் இத்தொழிலை ஆற்றமுடியும் என்று நம்புகிருர்கள்.

முதற் கட்டமாக இ. போ. ச., 200 பெண் கண்டர்களை வேலைக்கு அமர்த்தவிருக்கின்றது இவர்கள் கொழும்பில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள 'பச்சைவட்டச் சேவை'யிலேயே ஆரம்பத்தில் ஈடுபடுத்தப்படுவார்கள். இத்திட்டம் வெற்றியளித்தால் மற்றைய பஸ்களிலும் இவர்கள் சேவையிலமர்த்தப்படுவார்கள் என இ. போ. ச. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்தவாரம் இந்த நேர்முகப் பரீட்சை ஆரம்பமானது முதலாவது குழுவில் தெரிவு

(6-ம் பக்கம் பார்க்க)

## 'பட்ஜட்' நிகழ்ச்சி திரைப்படமாகும்

(கொழும்பு)

தேசிய அரசுப் பேரவையில் இம்மாதம் 15ந் திகதி வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும்போது அன்றைய நிகழ்ச்சிகளை அரச திரைப்படப் பிரிவு படம் பிடிக்குமென்றும், நிதியமைச்சரின் 'பட்ஜட்' உரை வானெலியில் ஒலிபரப்பப்படுமென்றும் சபாநாயகர் திரு. ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் நேற்று முன்தினம் பேரவையில் தெரிவித்தார். (ம-இ)

## யாழ். நவீன சந்தைக்கு 6 லட்சம் ரூபா கடன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை 2-வது நவீன சந்தையின் 2-ம் கட்டட வேலைகளுக்கு அரசு 6 லட்சம் ரூபாவை கடனுக வழங்கியுள்ளது.

இக்கடன் தொகையைக் கொண்டு இதன் கட்டட வேலைகள் விரைவில் பூர்த்தியாக்கப்படுமென யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

இக்கட்டடத்துக்கான அடிக்கல்லை முன்னுள் நகரபிதா அமரர் அல்பிரட் தங்கராஜா துரையப்பா நாட்டியிருந்தார்.

கடந்த மாதம் வடபகுதிக்கு விஜயம் செய்த உதவி உள்ளூராட்சி அமைச்சர் திரு. பி. வி. இம்புலானவிடம் இக்கட்டட வேலைகளுக்கு 6 லட்சம் ரூபாவை அரசு கடனுக வழங்கவேண்டுமென திரு. சிவஞானம் கேட்டுக்கொண்டதற்கமையவே இவ்வுதவி வழங்கப்பட்டுள்ளது. இக் கட்டிட வேலைகள் பூர்த்தியானதும், சிறுவர்களுக்கான சினிமா ஒன்றும் நகரில் இயங்கவுள்ளது. [கெ-இ]

### தி. மு. க. வுக்கு எதிராக
## எம்ஜி ஆர்-இந்திரா சூழ்ச்சித் திட்டம்?

புதுடில்லி, நவ. 12

கடந்தமாதம் 29ம் திகதி மீனம்பாக்கம் விமானநிலையத்தில் வைத்து தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனும் முன்னுள் இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தியும் தி. மு. க தலைவர்களுக்கெதிராக சூழ்ச்சித் திட்டம் தீட்டினுர்கள் என தி. மு. க. சட்டசபை உறுப்பினர் திரு. லட்சுமனன் இன்று புதுடில்லியில் கூறினுர்.

அன்றைய தினம் தமிழ்நாடு முதல்வரும் திருமதி காந்தியும் அரைமணிநேரம் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும், அதன் பின்னரே திடீரென தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டதாகவும் அவர் கூறினுர்.

### தமிழ்நாடு அமைப்பதற்காக
# உயிரை தியாகம்செய்யவும் தயாராக உள்ளனராம்
## வெளிநாடுகளிலுள்ள தமிழ்இளைஞர் பற்றி பண்டிதர்

(கொழும்பு]

இலங்கையில் தமிழ்மக்களுக்கென தனிநாடு ஒன்றை அமைக்கும் பணிக்கு வெளிநாடுகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் தமது உயிரையே தியாகம் செய்யத் தயாராக இருக்கிருர்கள்.

இவ்வாறு கடந்த வியாழக்கிழமை நாடுதிரும்பிய ஊர்காவற்றுறை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் தமது நிருபரிடம் தெரிவித்தார்.

சர்வதேச பாராளுமன்ற சங்க மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக சோவியத் நாட்டுக்குச் சென்றபண்டிதர் லண்டன், மாஸ்கோ, அமெரிக்கா, நோர்வே, மேற்கு ஜெர்மன், பிரான்ஸ், கனடா ஜெனிவா ஆகிய நாடுகளில் 6 வாரகாலம் சுற்றுப்பயணம் செய்த பின்னர் நாடுதிரும்பினுர்.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற இனக்கலவரங்கள் பற்றிக் கேள்வியுற்ற வெளிநாடுகளில் உள்ள தமிழ் இளைஞர்கள் கொதிப்படைந்த நிலையில் உள்ளனர் என்றும் பண்டிதர் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள இனக்கலவர அகதிகளின் புனர்வாழ்வுக்கு பல சர்வதேச நிதி ஸ்தாபனங்கள் நிவாரண உதவிகளை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளன என்றும் தெரிவித்தபண்டிதர் தாம் பெருந்தொகை உதவிகளுடனேயே நாடுதிரும்புயுள்ளதாகவும் கூறி

(6-ம் பக்கம் பார்க்க)

## 32 விவசாயிகள் மீது வழக்கு

[பண்டத்தரிப்பு]

கடந்த 1967ம் ஆண்டிலும் அதன் பின்னரும் பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் விவசாயக்கடன் பணம் பெற்று இதுவரை அப்பணத்தைத் திருப்பிச் செலுத்தாமலிருக்கும் 32 விவசாயிகள் மீது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. [இ]

## மாவையில் கந்தசஷ்டிவிழா

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் கந்தசஷ்டி விழா நேற்று முன்தினம் ஆரம்பமானது 17ம்திகதி வரை 7 தினங்களும்விசேஷ அபிஷேக ஆராதனைகளும் சொற்பொழிவுகள் இசைநிகழ்ச்சிகளும் இடம் பெறும். இறுதி நாளன்று சூரன்போர் நடைபெறும். (அ)

## சாவகச்சேரிப்
## பல. நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
# பதவிகள் வெற்றிடம்

மேற்படி சங்கத்தின் மின்தறி நெசவாலைக்குப் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. முகாமையாளர் (ஆண்).

வயது: 25 தொடக்கம் 40 வரை.
தராதரம்: க. பொ. த. (சாதாரணம்) இரு முறையில் எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட 6 பாடம் சித்தியும், நெசவு வேலையில் மூன்று வருட அனுபவம்.
வேதனம்: தகுதிகாண் காலம் ஒரு வருடத்துக்குச் சகல படிகளுமுட்பட மாதம் ரூபா 200/-. நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் மாதம் ரூபா 250/- - 10 X 10 - 350/-.

### 2. மேற்பார்வையாளர் (பெண்கள்).

வயது: 25 தொடக்கம் 35 வரை.
தராதரம்: க. பொ. த. (சாதாரணம்) இரு முறை எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட 6 பாடம் சித்தியும், நெசவு வேலையில் ஐந்து வருட அனுபவமும் நெசவுப் பயிற்சிப் பாடசாலையில் சித்திபெற்றோர் விரும்தக்கது.
வேதனம்: தகுதிகாண் காலம் ஒரு வருடத்திற்கு. சகல படிகளுமுட்பட மாதம் ரூபா 200/-. நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் மாதம் ரூபா 200/- - 10 X 10 - 300/-.

### 3. களஞ்சியப் பொறுப்பாளரும், இலிகிதரும் (ஆண்).

வயது: 25 தொடக்கம் 40 வரை.
தராதரம்: க. பொ. த. (சாதாரணம்) இரு முறையில் எண்கணிதம் அல்லது கணிதம் உட்பட ஆறு பாடம் சித்தியும், கணக்கியலில் இரண்டுவருட அனுபவமும். தட்டெழுத்து அறிவுடையவர் முன்னுரிமை பெறுவர்.
வேதனம்: தகுதிகாண் காலம் ஒரு வருடத்துக்கு. சகல படிகளுமுட்பட மாதம் ரூபா 200/-. நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் மாதம் ரூபா 200/- - 10 X 7.50 - 275/-.

### 4. இயந்திர இணைப்பாளர் (ஆண்கள்).

வயது: 20 தொடக்கம் 35 வரை.
தராதரம்: க. த. ப. சித்தியும், இயந்திர/பொறியியற் தொழிற்சாலையில்மூன்று வருட அனுபவமும்;
வேதனம்: தகுதிகாண் காலம் ஒரு வருடத்துக்குச் சகல படிகளுமுட்பட மாதம் ரூபா 100-. நியமனம் உறுதியாக்கப்பட்ட பின் மாதம் ரூபா 175/- - 10 X 7.50 - 250/-.

### 5. தொழிலாளர் (ஆண்).

வயது: 25 தொடக்கம் 35 வரை.
தராதரம்: கனிஷ்ட தராதரப் பத்திரம்.
வேதனம்: 150/- - 5 X 10/6 X 2 - 212/-.

### 6. காவலாள் (ஆண்).

வயது: 30 தொடக்கம் 40 வரை.
தாரதரம்: கனிஷ்ட தராதரப் பத்திரம், அனுபவம் விரும்பத்தக்கது.
வேதனம்: 150/- - 5 X 10/6 X 2 - 212/-.

### 7. நெசவாளர் (பெண்கள்).

வயது: 18 தொடக்கம் 30 வரை.
தராதரம்: கனிஷ்ட தராதரப் பத்திரமும், கைத்தறி நெசவில் அனுபவமும். மின்தறி அனுபவம் விரும்பத்தக்கது.
வேதனம்: சிறு கைத்தொழில் இலாகாவினால் தீர்மானிக்கப்படும் துண்டு வீதச் சம்பளம்.

விண்ணப்பதாரர் இரண்டு வருடங்களுக்கு மேல் இம்மாவட்டத்தில் நிரந்தரமாக வசிப்பவர்களாக இருத்தல்வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். சங்கத்தின் நிரந்தர ஊழியர்களாக இருப்போருக்கு வயதெல்லை நியதி இல்லை.

விண்ணப்பங்கள், சங்கத்தால் வழங்கப்படும் படிவத்தில் சொந்தக் கையெழுத்தில் பூர்த்திசெய்யப்பட்டு, 23-11-77ல் அல்லது அதற்கு முன்பு சங்கத்திற்குக் கிடைக்கக்கூடியதாகக் கடித உறையின் மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியையும், குறிப்பிட்டுப் பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். கல்வித் தகைமை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், வசிப்பிடத் தகைமை, இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளும் இணைக்கப்படவேண்டும்.

மேற்படி பதவிகட்கு முன்னர் விண்ணப்பஞ்செய்து, நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்களும், திரும்பவும் விண்ணப்பஞ் செய்தல்வேண்டும்.

விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு -/50 சதம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்.

சாவகச்சேரி,
9.11.77 7653

## அண்ணன் திருமணம்; தம்பி தற்கொலை

(யாழ்ப்பாணம்)

அண்ணனின் திருமண விஷயத்தில் மனஸ்தாபமுற்றிருந்த தம்பி, நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்!

ஊரெழு கிருஷ்ணன் சந்திரனின் (வயது 20) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது. யாழ். மரண விசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

இறந்தவர், யாழ் நகரத்தில் உள்ள ஸ்தாபனமொன்றில் விற்பனையாளராகக் கடமையாற்றிவந்தாரென்றும், பெற்றோரின் விருப்பத்திற்கு மாறாக அண்ணன் திருமணம் செய்ததினால், வாக்குவாதப்பட்டு, மனஸ்தாபமடைந்திருந்தாரென்றும், சம்பவதினம் வேலைக்குச் செல்லாமல், வீட்டிலிருந்து நச்சுத்திராவகம் அருந்தினாரென விசாரணையில் கூறப்பட்டது.

நச்சுத்திராவகப் போத்திலும், கடிதமொன்றும் மரண விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்டன. கடிதத்தில், "நான் உயிருடன் இருக்க விரும்பவில்லை; மருந்து குடித்துவிட்டேன், என் வாழ்வு முடிந்துவிட்டது" என்று எழுதப்பட்டிருந்தது. விசாரணையின் பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

—

## எதிரி சுற்றவாளி

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் கொலை வழக்கில், எதிரி சுற்றவாளியென ஜூரி சபையினர் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம். எம். அப்துல்காதர் எதிரியை விடுதலை செய்தார். (க.அ)

......

## மருந்து கலவையாளர்

[பண்டத்தரிப்பு]

அகில இலங்கை அரசாங்க மருந்துக் கலவையாளர்கள் (டிஸ்பென்சர்கள்) சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் கொழும்பிலுள்ள வைத்தியக் கல்லூரி சொற்பொழிவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. [இ]

......

## அமைச்சரின் மகன் வீட்டில் நகைதிருட்டு

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. மொன்டேகு ஜயவிக்கிரமவின் மகனின் இல்லத்தில் 10ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள நகைகள் திருட்டுப் போயுள்ளதாக கறுவாக்காட்டுப் பொலிசில் புகார்செய்யப்பட்டுள்ளது.

கறுவாக்காட்டிலுள்ள இவ்வீட்டின் பல்கணியின் கதவு வழியாக வீட்டுக்குள் நுழைந்தே இந் நகைகள் திருடப்பட்டுள்ளதாகவும் இத்திருட்டை அடுத்து அவ்வீட்டின் வேலைக்காரச் சிறுவனைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-இ)

## மேலும் 6 பஸ்கள் வரும்

(நெல்லியடி)

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போவிற்கு விரைவில் மேலும் 6பஸ்வண்டிகள் வந்து சேரவுள்ளதாக அறியப்படுகிறது. ஐக்கிய தேசியக்கட்சியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தேசிய தொழிற்சங்க சம்மேளத்தின் வடபகுதிக் கிளையினர் போக்குவரத்து அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்தியதன் பலனாகவே இப்பஸ்வண்டிகளை அனுப்ப அமைச்சர் உறுதி அளித்துள்ளாராம். [உ]

# வரி விளம்பரம்

### தேவை

பிளாஸ்றிக், நைலோன் முதலிய பொருட்களைக் கொண்டு கூடை பூவேலைகள் செய்வதில் இரண்டு கிழமைக்கு மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்க ஆசிரியை தேவை. எதிர்பார்க்கும் வேதனத்துடன் தராதரம், அனுபவம் என்பனவற்றைக் குறித்து விண்ணப்பிக்கவும். நிர்வாகி, ராஜகிரி கல்வி நிலையம், பருத்தித்துறை. 7652

சான்றிதழ் பெற்ற பயிற்றப்பட்ட அனுபவமுள்ள (or S, C. M.) மருத்துவ மாது தேவை. உடன் விண்ணப்பிக்கவும். சம்பளம் அரசாங்க விதியின்படி. The Jaffna Polyclinic, 61 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 7656

சமையற்காரர், (ஆண் அல்லது பெண்) பணியாளர்கள் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன்நேரில் வரவும். 'யாழ் இன்' பருத்தித்துறை வீதி, முத்திரைச்சந்தி,நல்லூர். 7640

### கல்வி

G. C. E. A/L விஞ்ஞான, வர்த்தக கலை வகுப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும், விசேட பட்டதாரிகளாலும் நடாத்தப்படுகின்றன. விரும்பிய பாடங்களை எடுப்பதற்கும், மீட்டல் வகுப்பில் பங்குகொள்ளவும் வசதி உண்டு. யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, ஆசுப்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7651

### விளம்பரம்

அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கத்தில் சுமார் 3500. வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனையாகவிருக்கின்றன. இதற்கான கேள்வி விண்ணப்பங்கள் யாவும் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களில் பூர்த்திசெய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 14-11-77 திகதி திங்கட்கிழமை மாலை 3-00 மணிக்கு முன்னதாகச் சங்கக் காரியாலயத்தில் சேர்ப்பிக்கப் படவேண்டும். விண்ணப்பப் பத்திரத்திற்கான வைப்புப் பணம் ரூபா 500/-ஆகும்.

இங்ஙனம்
க. கணபதிப்பிள்ளை
பொதுமுகாமையாளர்,
அள. மல். ப. நோ.
கூ. சங்கம்.
7644

### வெற்றுச்சாக்கு விற்பனைக்கு.

வலி கிழக்கு வட பகுதி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் 7365 தரம் பிரிக்கப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்குண்டு. இவற்றை கார்த்திகை மாதம் 19 ம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் கேள்விப்பத்திர முற்பணம் 50 ரூபாவும் விண்ணப்பப்பத்திரத்திற்கு 2 ரூபாவும் மொத்தம் 52 ரூபா கட்டி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் கார்த்திகை மாதம் 26-ந் திகதி சனிக்கிழமை(26-11-77க்கு முன் பதிவுத்தபால் மூலம் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல்வேண்டும். பதிவுத்தபாலின் இடதுபக்க மூலையில் வெற்றுச்சாக்கு விண்ணப்பம் என்று குறிப்பிடுதல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்
வலி கிழக்கு வட பகுதி
பல - நோக்கக் கூட்டுறவுச்
சங்கம், அச்சுவேலி.
7649

### விற்பனைக்கு

வயல், தோட்டக்காணிகள் விற்பனைக்கு ஓமந்தைப்பகுதியில் சிறுநீர்ப்பாய்ச்சல் வயல்களும், கிணறுகள், காய்க்கும் மா, பலா, தென்னைகள், பிரயோசனம் தருகின்ற வேறு பல, மரவகைகள், நீர் இறைக்கும் இயந்திரம், தோட்ட உபகரணங்கள் உடைய மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, வாழை, பீட்றூட் செய்யப்படுகின்ற தோட்டக்காணிகளும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும். கே. சிவராசசிங்கம், க. கு. சுப்பிரமணியம்கடை,பருத்தித்துறை. தொலைபேசி: 568. (7654)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மின்சாரம் உட்பட சகல வசதியுடன், கல்வீடு வளவும், 8 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு,விபரங்கட்கு: B. விஸ்வேஸ்வரன், No. 53 கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13. 7497

மின்சாரத்தில் இயங்கும் அரிசி மில் விற்பனைக்குண்டு. 2 மோட்டர் 10 H. P. 7 1/2 H. P. அலர் 3. கிரைண்டர் 1. விபரங்களுக்கு: 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 7617

### வாடகைக்கு

நவீன வசதிகளுள்ள விசாலமான வீடு சில வருஷங்களுக்கு சுண்டிக்குளியில், நல்லூரில் வாடகைக்குத் தேவை, தொடர்புகொள்ளவும். 292/4, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 7563

### தவறிவிட்டது

பூப்பற்றன் புத்தகமும் ஆங்கிலப் புத்தகமும் 798 பஸ்ஸில் தவறிவிட்டது. பரீட்சைக்கு அவசியமானபடியால் எடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். P. தம்பிமுத்து, மானிப்பாய் வீதி, உடுவில், சுன்னாகம். 7646

8-11-77 வண்ணேரிக்குளம் கடுகதியில் கன்வஸ் நீலநிற பாக்குடன் அடையாள அட்டை கூப்பன் முதலிய முக்கியமான பொருட்கள் தவறிவிட்டன. கண்டவர்கள் உடன் அதினுள் உள்ள விலாசத்திற்குத் தொடர்புகொண்டால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். மாணிக்கம் வடிவேலு, No. 453, தருமபுரம், பரந்தன். 7658

## இலங்கைஜெர்மன் ஒலிபரப்பு சேவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஜெர்மன் ஒலிபரப்பு சேவை கேட்கும் நேயர்கள் சங்கமொன்று மானிப்பாயில் அமைக்கப்பட்டுள்ளது

இச்சங்கம் ஆங்கிலம் மூலம் ஜெர்மன் பாஷையை கற்பதற்கான வசதியை ஜெர்மன் ஒலிபரப்புச்சேவையில் நடத்தும்படி கேட்டுள்ளது. (செ இ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க





# 'பிராயச்——சித்தம்'

அன்று கடுமையான மழை.

அவன் வேலைக்குச் செல்லவில்லை. ஏற்றிச்செல்வதற்காக வந்த கம்பனிக் காரையும் திருப்பி அனுப்பிவிட்டு வீட்டிலேயே நின்றுவிட்டான். பல நாட்கள்... மாதங்கள்... ஏன் சில வருடங்களுக்கு பின்னர் ஏற்பட்ட புது அனுபவம்.

காலையில் ஒன்பது மணிக்குப் பின் வீட்டில் இருப்பது இது தான் முதல்தடவை. ஆபீஸ் இல்லாவிட்டால் வீட்டைவிட்டுக் கிளம்பி எங்காவது சென்றுவிடுவான். பின்னர் வீடு திரும்ப இரவாகிவிடும்.

மனதினில் ஏற்பட்டுள்ள ஒரு குறுகுறுப்பு- நெருடல் அவனை வீட்டிருலிருக்க விடுவதில்லை.

நான்கு வருடங்களுக்கு முன்னர் இதேபோன்றதொரு சூழ்நிலையில் அவன் செய்த செயல் நடந்துகொண்ட முறை... அவனது நெஞ்சில் அழியா ஓவியமாகப் படித்திருந்தது.

ஹோலுக்குள் வந்தான். ஒரு மூலையிலிருந்த சோபாவில் அமர்ந்தான். கண்களை மூடிக்கொண்டான்.

நான்கு வருடங்களுக்கு முன் இதேநேரத்தில் இதே சோபாவில்தான் அமர்ந்திருந்தான்.

அப்போது-

நினைவலைகள் அவனை கடந்தகாலத்துக்கு இட்டுச் சென்றன.

●

மழை!

வெள்ளம் - பெருக்கு!

ஆபீஸுக்கு செல்லமுடியாத சூழ்நிலை

கம்பனி காரை அனுப்பி அவனை வரவழைக்காது.

அப்போதும் இதே வீடு தான். இதே சோபாதான். அதில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டிருந்தான்.

கதவை அப்போது யாரோ தட்டினார்கள். சோபாவில் சாய்ந்திருந்தபடியே தலையை வெளியே நீட்டிப் பார்த்தேன்.

யாரோ ஒரு பிச்சைக்காரி. "ஐயா... ஐயா" முகத்தைச் சுழித்துக்கொண்டு கண்களை மூடினான். ஒருசில நிமிடநேரம் அவன் கூப்பிட்டுக்கொண்டிருந்தாள்.

எரிச்சல்!

"வீட்டிற்குள் பேசாமலிருக்கவிடமாட்டாள் போலிருக்கின்றதே...!"

ஆத்திரத்துடன் வெளியே வந்து கதவை படாரென்று திறந்தேன்.

அவள் ஏதோ சொல்ல வாயெடுத்தாள். கோபத்துடன் மூர்க்கனாக அவளை வாயிற்படியிலிருந்து தள்ளிவிட்டேன்.

அவள் சென்று மெயின் ரோட்டில் விழ-

ஒரு லொறி வேகமாக வந்து-

மறுகணம் பெரிய ஓசை!

அவள் இரத்த வெள்ளத்தின் நடுவே கிடந்தாள்.

நான் பயந்துவிட்டேன்.

அடிமேலடி வைத்துவெளியே வந்தேன்.

ரோடில் ஒரு கூட்டம். அதற்குள் ஒரு இன்ஸ்பெக்டர்- "நீ எப்படி இங்கே விழுந்தாய்"

கூட்டத்தின் வெளியேநின்ற எனக்கு அவள் திக்கித்திணறிய படி கூறிய பதில் கேட்டது. திகைத்தேன்- "அந்த வீட்டு... அந்த வீட்டு..."

பலகண்கள் எனது வீட்டையும் வெளியே நின்ற என்னையும் நோக்கின.

அவள் தொடர்ந்தாள்- "அந்த... வீட்டு படிகளில் ஏறினேன்... மழைக்கு வழுக்கி விட்டது... விழுந்துவிட்டேன்"

நான் திகைத்துவிட்டேன்.

இன்ஸ்பெக்டர் சிறிது விடாக்கண்டன் போலிருக்கின்றது. கேட்டார்- "ஏன் அங்கே சென்றாய்". பிச்சை எடுக்கவா... இல்லை வேறு ஏதாவது நோக்கத்துடனா"

நான் முள்ளின்மேல் நின்றேன்.

"இல்லை. நான் பிச்சை எடுக்க சொல்லவில்லை. வீட்டின் வெளியே இந்த நூறு ரூபாவுக்கான செக் விழுந்து கிடந்தது... இவருடையதாக விருந்தல் கொடுக்கலாம் என்று வந்தேன்"

மீண்டும் திகைப்பு.

அது என்னுடைய செக் தான்! நல்ல நோக்கத்துடன் வந்த அவளை...

இன்ஸ்பெக்டர் என்னிடம் ஏதோ கூறினார். நான் பிரமை பிடித்தவனை அவளை நோக்கி நடந்தேன்.

செக்கைப் பார்த்தேன். தலையை அசைத்தேன். நடுங்கும் கரங்களால் செக்கைக் கொடுத்தாள். வாங்கினேன்.

அவள் இறந்துவிட்டாள்.

நான் திகைத்துவிட்டேன்.

நாட்டில் கீழ்த்தரமாக கருதப்படும் ஒரு பிச்சைக்காரி... கீழே கிடந்த செக்கை எடுத்து... நான் கவனிக்காவிட்டாலும் பலதடவை என்னை அழைத்து... என்னால் தள்ளி விழுத்தப்பட்டு இறந்து என்னைக் காட்டிக் கொடுக்காமல்...

என்னல் நினைத்துப் பார்க்க முடியவில்லை!

●

அவன் அங்கேயே இருந்தான்.

பழைய நினைவுகள் அவனை ஏதோ செய்தன.

"டக் டக் டக்..."

கதவு தட்டப்படும் ஓசை. தொடர்ந்து யாரோ ஒருவனது குரல் - "ஐயா... ஐயா..."

திகைத்தான் "இதேபோன்றதொரு வேளையில் தான்..."

மீண்டும் யாரோ அழைத்தார்கள். யன்னலினூடாக கூட எட்டிப்பார்க்காமல் வெளியே சென்றான். கவைத் திறந்தான்.

கதவு திறந்த தாமதம் ஒருவன் உள்ளே வந்தான். தொடர்ந்து ஐந்து பேர்கள்.

அவர்கள் முகங்களில் கரிய முகமூடி.

இருவர் அவனை அழுத்திப் பிடித்து பழைய சோபாவுடன் கட்டினார்கள். பாக்கி மூவரும் உள்ளே சென்றனர்.

-திருடர்கள்!

ஒருகணம் அவன் திகைத்தான்.

"பிராயச்சித்தம்" - அவன் வாய் முணுமுணுத்தது.

அவனைக் - கட்டிப்போட்டு இருவரும் மூவரைத் தொடர்ந்து உள்ள சென்றனர்.

ஹோலில் அவன் தனிமையாக சோபாவில் கட்டுண்டு கிடந்தான்.

வெளியே ஆளரவம் கேட்டது.

டேய் மூர்த்தி உள்ளே வரவா... நாங்கள் உன்னுடன் பேசவேண்டும்"

சினேகிதர்கள்.

அவர்கள் வந்தால் திருடர்களை பிடிக்கலாம். சிந்தனை ஒருகணம்.

"நீங்கள் போய் பார்க்கில் இருங்கள் நான் வருகின்றேன்" அவன் கூறினான்.

தொடர்ந்து அவர்கள் சென்றுவிட்டார்கள்.

யாரோ வருகின்றார்கள். இனித் தப்பவழியில்லை என்று நடுங்கியபடி ஒளிந்துநின்ற திருடர்களுக்கு அவனது நடத்தை புரியவில்லை.

"பிராயச்சித்தம்?"

(யாவும் கற்பனை)

—உதயவாணன்—

---

(முன் தொடர்ச்சி)

## ஆவியுலகத் தொடர்பு (12)

# நோய்களைத் தீர்த்த விதம்

நோர்வே நாட்டைச் சேர்ந்த அன்னி ஒல்சன் என்ற 13 மாதக் குழந்தை ஒன்றுக்கு மூளையில் கோளாறு ஏற்பட்டது. அதாவது உடல் வளர்ந்ததே தவிர மூளை வளர்ச்சியடையவில்லை. அக்குழந்தை சாதாரணமாக அழுவதுகூட இல்லை பால் அருந்துவதும் இல்லை. இதனல் இக்குழந்தையின் பெற்றோர் ரேஸ் கிளாடன் என்ற ரேடியத்தின் உதவியை நாடினர்.

குழந்தைக்கு மீடியம் மூலம் சிகிச்சையளிக்கப்பட்டது. சிறிது சிறிதாக குணம் ஏற்பட்டது. சிகிச்சைக்கு முன்பு அக்குழந்தை புன்னகை செய்வது எப்போதோ ஒரு முறை அபூர்வமாக இருக்கும். ஆனல் இப்போது நன்கு விளையாடுகிறது. பால் குடிக்கிறது என்று அக்குழந்தையின் தாயார் திருமதி ஈலி ஒல்சன் மகிழ்ச்சியோடு அறிவித்திருக்கிறார்.

இதேபோல் இஸ்ரேல் நாட்டில் ஜாக் மார்ட்டின் என்ற மீடியமும் நோய்களைக் குணப்படுத்துவதில் புகழ்பெற்றுள்ளார் ஆரம்பத்தில் இஸ்ரேல் டாக்டர்கள் இவருக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். உடனே இவர் டாக்டர்களுக்கு அழைப்பு விடுத்து ஒரு கூட்டம் கூட்டினார். இதில் 40 டாக்டர்கள் கலந்துகொண்டனர். இவர் ஆவிகள் நோய்களைக் குணப்படுத்தும் விதத்தை விளக்கிச் சொன்னர். அதன் பிறகு தங்களால் குணப்படுத்த இயலாத சில நோயாளிகளை டாக்டர்களே இவரிடம் அனுப்புகின்றனர்.

அதுமட்டுமல்ல இவர் பொலிஸ் இலாகாவிலும் சில நண்பர்களைப் பெற்றுள்ளார். எனவே இவர் சில சிக்கலான வழக்குகளில் ஆவிகள் உதவியுடன் துப்புக்கொடுத்திருக்கிறார்.

பிறிதொரு சம்பவம். ரெவ் ரொனல்டு அட்கின்ஸ் என்பவர் அழகான பசுமையான தீவுகளில் ஒன்றான ஆண்டிகுவா (மேற்கிந்திய தீவுகளில் ஒன்று) என்ற தீவில் பள்ளி ஆசிரியராக வேலைபார்த்த போது நடந்த சம்பவம். திரு. அட்கின்ஸ் தமது நண்பர்களுடன் வயதான விவசாயி ஒருவர் வீட்டில் தங்கியிருந்தார்.

### மலேரியாவுக்கு சிகிச்சையளித்த ஆவி

கிறிஸ்மஸ் விடுமுறையின் போது அவருக்குக் கடுமையான மலேரியா நோய் கண்டது. கடுமையான காய்ச்சலோடு அவதிப்பட்டுக்கொண்டிருந்தார். அங்கே தகுந்த மருந்து வசதிகளும் இல்லை. அன்று இரவு இவருக்குப் புதிய அனுபவம் ஒன்று ஏற்பட்டது. திடீரென்று அந்த அறையில் புகையிலை தியில் கருகுவதைப் போன்ற நாற்றம் ஏற்பட்டது. திரு அட்கின்ஸ் ஆச்சரியப்பட்டார். ஏனென்றல் அவர் தங்கியிருக்கும் அந்த வீட்டுக்காரர் வீட்டினுள் யாரையும் புகைபிடிக்க அனுமதிப்பதில்லை.

அப்படி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்த அட்கின்ஸ் தன்னையறியாமலேயே தன் சட்டையைக் கழற்றினர். அப்போது அவரைச் சுற்றி ஒரு விசித்திரமான வெப்பம் பரவியது. தன் மீது யாரோ சாய்ந்திருப்பதைப்போல திரு. அட்கின்ஸ்உணர்ந்தார். ஆனல் கண்களுக்கு எதுவும் புலப்படவில்லை.

திடீரென்று யாரோ இவரது தோளில் ஊசியால் குத்துவதைப் போன்று தோன்றியது. அது கற்பனையாகவும் இல்லை. திடீரென்று தோன்றிய வலியால் திகைத்துப் போயிருந்த அட்கின்ஸாவுக்கு உடனே ஆழ்ந்த உறக்கம் வந்துவிட்டது.

சில மணி நேரம் கழித்து விழித்தெழுந்து பார்த்தால் அவருக்கு ஏற்பட்டிருந்த மலேரியாக் காய்ச்சல் மாயமாய் மறைந்துவிட்டிருந்தது. அந்த வீட்டுக்காரரும் நண்பர்களும் இதைக் கண்டு மிகவும் ஆச்சரியமடைந்தனர்.

இரண்டு தினங்கள் கழித்து ஒரு ஆவியுலக மீடியத்திடம் இருந்து அவர்களுக்கொரு செய்தி வந்தது. ஒரு காலத்தில் அவ்வீட்டில் இருந்த டாக்டர் ட்ரெஸான் என்பவரின் ஆவி அவர்களுடன் பேச விரும்புவதாகத் தெரிவித்தார். இவர்களும் தொடர்பு கொண்டனர் இரண்டு தினங்களுக்கு முன்பு தானே அங்கு வந்ததாயும், நோய் அதிகமாய் இருந்ததால் அவருக்கு ஒரு ஊசி போட்டதாயும், டாக்டர் ட்ரெஸானின் ஆவி தெரிவித்தது. இதைக் கேட்டு அனைவரும் அதிர்ச்சியும் ஆச்சரியமுமடைந்தனர்

திரு. அட்கின்ஸ் வாழ்க்கையில் நடந்த மற்றொரு சம்பவம். இவர் 10 வயதாக இருக்கும்போது இவரது தகப்பனார் இறந்துவிட்டார். அவர் ஒரு சிறந்த டாக்டர். 13வது வயதில் அட்கின்ஸ் சிறிது நோய்வாய்ப்பட்டார். அப்போது அவர் பள்ளியிறுதிப் படிப்பிற்கான சோதனைக்குத் தயார் செய்துகொண்டிருந்தார். இவருடைய தாயார் உடனே மருத்துவரிடம் போகும்படி கூறினர். தான் மருத்துவரிடம் போகப்போவதில்லை என்றும், அப்படிப் போனல் தன்னை ஓய்வெடுத்துக்கொள்ளும்படி அவர் வற்புறுத்துவார் என்றும், அதனல் பள்ளிச் சோதனையில் தான் கலந்துகொள்ள முடியாதென்றும் தாயாரிடம் மன்றடினர்.

சிறிது நேரத்தில் அந்த அறையில் மருந்துக்களின் வாடை அடித்தது. தன்

**வி. ரவிச்சந்திரன்**

தாயார் யாரோ மருத்துவரை அழைத்திருக்கின்றார் என்று அட்கின்ஸ் நினைத்தார். ஆனல் யாரும் வரவில்லை. தாயார் மட்டுமே வந்து உனது தந்தை

(6-ம் பக்கம் பார்க்க)

---

### பயனுள்ள எழுத்து

நீங்கள் இறந்து அழிந்து போனவுடனேயே மக்கள் உங்களை மறந்து விடலாகாதெனில் படிப்பதற்குப் பயனுள்ளவைகளை எழுதுங்கள் அல்லது எழுதுவதற்குப் பயனுள்ள காரியங்களைச் செய்யுங்கள்.

—பெஞ்சமின் பிராங்க்ளின்

---

### ஆரிடம் சொல்வது, வெட்கமில்லை!

ஒற்றுமை ஒற்றுமை என்கிறவர்-ஏன்<br>
பற்றுள்ள காகத்தைப் பார்ப்பதில்லை<br>
வெற்று வேட்டுக்களின் சத்தமது-வீண்<br>
வேடதாரிகளின் ஓலமென்பேன்.

ஒழுக்கம் ஒழுக்கமென்றோதிடுவார்-ஏன்<br>
ஒட்டகத்தைப் பின் பற்றவில்லை.<br>
வழுக்கி விழுபவர் கூக்குரல் தான்-அது<br>
வல்லவர் நல்லவர் சொல்வதல்ல.

ஒழுங்குக்கு வெள்ளையன் என்பார்கள்- ஏன்<br>
விலங்கினத்தைப் பார்க்கக் கூசுகிறார்?<br>
எறும்பிலும் பார்க்கவா நம்முலகில்-அந்த<br>
ஏற்றத்துக் கோர் வழி காட்டிவார்.

நன்றி நன்றி என்று சொல்லிடுவார்-ஏன்<br>
நாயிடம் போயதைக் கற்பதில்லை?<br>
கொன்றிடும் வேலியை கண்டாலும்-அவன்<br>
குத்தியிருந்து வால் ஆட்டிடுவான்.

கற்புக் கற்பு என்று வரைந்திடுவார்-ஏன்<br>
கவரிமான் பாடம் கேட்பதில்லை<br>
அந்நியர் தம்மவர் கூக்குரல்கள்-இதை<br>
ஆரிடம் சொல்வது, வெட்கமில்லை?

—சாந்தி

## கலாயோகியின் வாழ்க்கையும்பணிகளும் -8

# இங்கிலாந்திலும் இந்தியாவிலும் நூல்கள் வெளியிடல், கலைக்காட்சிகள் நடத்துதல்

கலாயோகி தனது பாரிய நூலான மத்தியகால சிங்களக் கலை அச்சிட்டு முடிந்ததும் 1909-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியா சென்று அவனீந்திரநாத்தாகூர், ரவீந்திரநாத்தாகூர் விருந்தாளியாகத் தங்கினர். அவனீந்திரநாத்தாகூர் பாரம்பரியமான இந்திய ஓவியமுறையைப் பின்பற்றி ஓவியங்கள் வரைந்து இந்திய ஓவியம் சம்பந்தப்பட்டவரையில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினர். இவர் நந்தலால்போஸ் முதலியவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கியவர். இவர் ஓவியங்களைப் பாராட்டி "மொடேன் ரிவியூ" முதலிய சஞ்சிகைகளில் கலாயோகி பல கட்டுரைகளை எழுதினர். இவரும் இவர் மாணவர் நந்தலால்போசும் பின்னர் கலாயோகி எழுதிய "புத்தரும் புத்தர் கொள்கைகளும்" என்னும் நூலுக்கு பல ஓவியங்கள் வரைந்துகொடுத்தனர். இக்காலத்தில் கலாயோகி கல்கத்தாவில் பல இடங்களிலும் கலை சம்பந்தமான சொற்பொழிவுகளை ஒளிப்படங்களின் உதவியோடு (Lenten Lectures) ஆற்றினர். இச்சொற்பொழிவுகள் கலை சம்பந்தமாக பெரும் விழிப்பை ஏற்படுத்தியதாக சிறந்த கலா விமர்சகரான ஓ. சி. கங்குலி கூறியுள்ளார்.

அக்காலத்தில் மிகப்பிரபல்யமாயிருந்த இரவிவர்மாவின் ஓவியங்களை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாயிருக்கும். இவர் கேரளத்தைச் சேர்ந்தவர். தமது சுற்றத்தார் ஒருவரிடமும் ஓர் ஐரோப்பியரிடத்தும் ஓவியம் கற்றவர். இந்தியத் தேவதேவியர்களையும், புராண இதிகாசக் கதைகளையும், பெரிய எண்ணெய்ப்படங்களாக சித்தரித்தார். இவை ஜேர்மனியில் வர்ணப்படங்களாக அச்சிடப்பெற்று இந்தியாவில் பெருந்தொகையாக விற்கப்பட்டன. ஒரு காலத்தில் இவர் வரைந்த இலட்சுமி, சரஸ்வதி படங்கள் இந்துக்களின் வீடுகளை எல்லாம் அலங்கரித்தன. ஆனால் இவை இந்தியக் கலைப் பரம்பரைக்கு மாறானவை என்பது கலாயோகியின் கருத்து. மேலே குறிப்பிடப்பட்ட இலட்சுமி சரஸ்வதி படங்களில் பலகைகள் காணப்பட்டபோதிலும் தேவியரின் தோற்றம் ஒரு அழகான பெண்ணின் தோற்றத்தையே பிரதிபலிக்கிறதென்றும் இவற்றில் தெய்வாம்சத்தைக் காண முடியாதென்றும் சுட்டிக்காட்டினர்.

கலாயோகி 1911-ம்ஆண்டில் அலகபாத்தில் நடைபெற்ற பொருட்காட்சியில் கலைப் பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இதன் பொருட்டு 1910-ம் 11-ம் ஆண்டுகள் கலைப் பொருள்களைச் சேகரிக்கும்பொருட்டு இந்தியாவின் பலபாகங்களிலும் சுற்றுப்பிரயாணம்செய்தார். இப் பிரயாணங்களில் அவர் மனைவி எதெல் குமாரசுவாமியும் பெரும்பாலும் உடன் சென்றனர். இப் பிரயாணங்களைப் பற்றி எதெல் குமாரசுவாமி தமது நண்பன் ஆஷ்பிக்கு பல கடிதங்கள் எழுதினர். முதல்கடிதத்தின் ஒரு பகுதி பின்வருமாறு!

"நாங்கள் கலைக்காட்சிக்கு பொருள்களைச் சேகரிக்கும் பொருட்டு வடஇந்தியாவில் நகரநகரமாய் பிரயாணம் செய்துவருகிறோம். பெரும்பாலான பொருள்கள் தரம் குறைந்தவையாயிருந்தபோதிலும், சில கலையம்சம்பொருந்தியவையாகக் காணப்பட்டன. அக்ராவும், டில்லியும் இன்றும் பழுதடையாமல் காணப்படுகின்றன. கடைகளுக்குள் போனால், ஓரளவு பண்டைய இந்தியாவை காணமுடிகிறது. ஆனந்தா போய் மக்களைப் பேட்டிகாணும்போது நான் வண்டியிலிருந்தபடி எல்லாவற்றையும் பார்த்து அப்படியே மனதில் பதித்துவைத்துக் கொள்கிறேன். அக்காட்சிகள் அற்புதமானவை. பெண்கள் தோற்றம் அபாரமானது. இவர்களின் உடைகளும் அவற்றின் வர்ணங்களும் சொல்லுக்கடங்காத அழகுடையவை. இங்கு அவசரமென்பதைக் காணமுடியாது. இவர்களிடம் காணப்படும் பண்பாட்டைப்போல வேறெங்கும் காணமுடியாது. நாகரிகமின்னதென்று அறிந்த மக்களிடையே இருக்கிறேன் என்னும் உணர்ச்சி எனக்கேற்பட்டது".

இன்னும் ஒரு கடிதத்தில் அவர் கூறுவது:

"ஆனந்தா இங்கு வசிக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். அவருடைய சேவை இங்கு மிகவும் வேண்டப்படுகிறது. அவருக்கு மிகவும் செல்வாக்கு இருக்கிறபடியால் இங்கு அவர் தங்கவேண்டியதின் அவசியத்தை உணர்கின்றேன். அவர் எங்கு சென்றாலும் மாணவர் அவரை வழிபடுகின்றனர். மற்றையவரும் அப்படியே. கல்கத்தாவில் இந்திய கலைகளில் ஆர்வமுள்ள சில ஆங்கிலேயர் இருக்கின்றனர். அவர்கள் இவருக்கு எந்த உதவியையும் செய்ய ஆயத்தமாகவிருக்கிறார்கள். இந்தியாவில் ஒரு பெரும் கலைக்கூடத்தை தாபிக்க சிலர் திட்டம் போட்டிருக்கிறார். அது ஒருகாலத்தில் கைகூடுமென்ற நம்பிக்கை அவருக்குண்டு. எனக்கும் அப்படியே. இத் திட்டத்தின் எதிர்காலம் எப்படியிருந்தபோதிலும் அவர் காசியில் சிலகாலம் தங்கத் தீர்மானித்துவிட்டார். இதில் துக்ககரமான அச்சமென்னவெனில் இங்கிலாந்திலிருக்கும் நோர்மென்சப்பலைவிடவேண்டுமென்பதே. இதுபற்றி என்னால் நினைக்கவும் எழுதவும் முடியாமலிருக்கிறது. ஆனால் அதை விடவேண்டும்போலத்தான் தோன்றுகிறது".

வடஇந்தியாவில் கலைப் பொருள்களைத் தேடிப் பிரயாணஞ்செய்தபோது கலாயோகி பாபு பகவான் தாஸ் என்னும் மகாபுருஷரை சந்தித்தார். இவர் அன்னபெசண்ட் அம்மையாருக்கு பிரம்மஞானசபையைத் தாபிப்பதற்கு பேருதவிபுரிந்தவர். வேதங்கள், உபநிடதங்கள், சிமிர்மிதருள், இதிகாசங்கள், புராணங்கள் இவற்றை திறம்படக் கற்றவர். இவற்றின் சாரத்தை பல நூல்களாக காலத்துக்கேற்றமுறையில் வெளியிட்டவர். பல்வேறு சமயங்களுக்குள் காணப்படும் அடிப்படை உரிமையை ஒரு பெருநூல் வெளியிட்டுள்ளார். இவர் இந்திய கலாச்சாரத்துக்கு செய்த பெருமை சேவையைப் பாராட்ட இவருக்கு இந்திய அரசாங்கம் 'பாரத ரத்ன' என்னும் உன்னத விருதுவை வழங்கியது. இவர் குடும்பத்தில் பாரம்பரியமாகவிருந்த சில ஓவியங்களை கலாயோகி வாங்கமுயற்சித்தார். இவர்கள் அவற்றை விற்கவிரும்பாததால் அவற்றை இரவலாகப் பெற்று பிரதிபண்ணிக்கொண்டு திருப்பிக் கொடுத்தார். அலகபாத்தில் பொருட்காட்சி நடந்தபோது கலாயோகியும் அவரது மனைவியும் பாபுபகவான் தாசின் விருந்தினராக ஆறுவாரகாலம் தங்கியிருந்தார்.

மேற்கூறிய பிரயாணத்துக்கும் கலைப்பொருள்களை வாங்குவதற்கும் கலாயோகி தன் பொருளையே செலவழித்தார். முன்னர் இங்கிலாந்தில் வீடு வாங்குவதற்கும், முதலில் சில நூல்களை வெளியிடுவதற்கும் தன் பொருளையே செலவழித்தார். இவருக்குத் தகப்பனார் பெருந்தொகையான சொத்துக்களை விட்டுச் சென்றபடியால் இவருக்கு ஒருபொழுதும் பணக்கஷ்டமேற்படவில்லை.

பொருட்காட்சி முடிந்தபின் 1912-ம் ஆண்டில் சிலமாதங்கள் சாந்திநிகேதனில் தாகூர் அவர்களோடு தங்கினார். இவ்விருவருக்குமிடையில் ஏற்பட்ட நட்பு தாகூர் மறையும் வரை நீடித்திருந்தது. கலாயோகி அஜித்குமார் சட்டர்ஜியின் உதவியோடு தாகூர் கவிதைகளை ஆங்கிலத்தில் சிலவற்றை மொழிபெயர்த்து மொடேன் ரிவியூ சஞ்சிகையில் 1911-ம் ஆண்டு ஏப்ரல், மே மாத இதழ்களில் வெளியிட்டார். இம்மொழிபெயர்ப்பே ஆங்கிலத்தில் வெளிவந்த முதல் மொழிபெயர்ப்பாகும். பிற்காலத்தில் தாகூரின் ஓவியங்களை உலகுக்கு அறிமுகம் செய்துவைத்தவரும் கலாயோகியே. சாந்திநிகேதனில் எடுக்கப்பட்ட படமொன்றில், கலாயோகி ஒரு நாற்காலியில் இருக்க தாகூர் பக்கத்தில் நிற்கிறார். இதிலிருந்து தாகூர் கலாயோகியை எவ்வளவு கண்ணியப்படுத்தினார் என்பது தெரியக்கூடியதாகவிருக்கிறது. கலாயோகி அமெரிக்காவுக்கு போகத் தீர்மானித்தபோது, தாகூர் இவரைத் தனது அமெரிக்க நண்பருக்கு அறிமுகம் செய்து கடிதங்கள் எழுதி வைத்தார்.

கலாயோகி விரும்பியமாதிரி அலகபாத் பொருட்காட்சி முடிந்தபின் இந்தியாவில் தங்கவில்லை. 1912-ம் ஆண்டுக்கும் 1816-ம் ஆண்டுக்கும் இடையில் பெரும்பாலான காலத்தை இங்கிலாந்திலேயே கழித்தார், இக்காலத்தில் பல நூல்களை எழுதிவிட்டார். முன்புபோல இவற்றைத் தாமே வெளியிடாது பல பதிப்பகங்கள் மூலம் வெளியிட்டார். இந்தியக் கலைகளும் கைத்தொழில்களும் [1913] இந்து பௌத்த புராணக் கதைகள் (1914) புத்தரும் புத்தரின் கொள்கைகளும் (1916) ராஜபுத்திர ஓவியங்கள் (1916) முதலியவையே இக்காலத்தில் வெளியிடப்பட்ட முக்கிய நூல்கள். மேற்குறிப்பிடப்பட்ட நூல்களில் இந்தியக் கலைகளும் கைத்தொழில்களும் என்பது ஒரு முக்கிய நூலாகும். இந்தியக் கலைகள் பற்றிய ஒரு கைபேடாக இதைக்கொள்ளலாம். வழக்கமான அடிக்குறிப்புக்களில்லாமல் சகலரும் படித்து விளங்கக்கூடியமுறையில் எழுதப்பட்டிருக்கிறது: இதில் 225க்கு மேற்பட்ட விளக்கப்படங்கள் காணப்படுகின்றன. ஆபரணங்களைப் பற்றிக் கூறும்போது யாழ்ப்பாணத்தில் காணப்படும் ஆபரணங்களைப்போல் வேறெங்கும் காணமுடியாதெனக் கூறியுள்ளார். (பக்கம் 155). இந்நூலைத் தமிழில் மொழிபெயர்த்தால் இந்து சமயம் இந்துநாகரிகம் முதலியவற்றைப் படிக்கும் மாணவருக்கு பேருதவியாயிருக்கும்.

'புத்தரும், புத்தர் போதனைகளும்' என்னும் நூலில் முக்கிய விஷயங்களில் இந்து சமயமும் பௌத்தமும் ஒத்திருக்கின்றனவென்று இவர் கூறியிருப்பது (பக்கம் 219) சாதாரணமாக மக்கள் பௌத்தத்தைப் பற்றிக் கொண்டுள்ள கருத்துக்கு மாறுபட்டதாகும். இராஜபுத்திர ஓவியங்கள் என்னும் நூலில் இந்து ஓவிய மரபைப் பின்பற்றி எழுந்தனவென்றும் முகாலயர் காலத்து ஓவியங்களுக்கு மாறுபட்டவையென்றும் ஐயந்திரிபற விளக்கியுள்ளார்.

தென்னாபிரிக்காவில் இந்தியர்களின் உரிமைகளுக்காகப் போராடிவிட்டு 1914ம் ஆண்டு இங்கிலாந்து மார்க்கமாக இந்தியா திரும்பியபொழுது காந்தியடிகளுக்கு லண்டனில் ஒரு வரவேற்பளிக்கப்பட்டது. இவ்வரவேற்பில் எம். ஏ. ஜின்கு., சரோஜினிதேவி முதலியோருடன் கலாயோகியும் பாராட்டுரை வழங்கியபின்னர் ஒருசந்தர்ப்பத்தில் சரோஜினிதேவி கலாயோகியை இந்தியாவின் தலையாய தூதுவர் (Supreme Ambassador) எனக் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் ஒரு கலைக் கூடத்தை தாபிக்க எடுத்த முயற்சி கைகூடாது என்ற நிலையேற்பட்டபொழுது அமெரிக்காவிலிருந்து ஒரு அழைப்பு வந்தது. இதுபற்றி அடுத்த கட்டுரையில் கவனிப்போம்.

ச. அம்பிகைபாகன்

### கரையும் பிஸ்கட்

தேவையான பொருட்கள்:

மாஜரின்-5 அவுன்ஸ்
சீனி- 5 அவுன்ஸ்
மாவு- 10 அவுன்ஸ்
முட்டை- ஒன்று
முந்திரி பருப்பு- 1 கோப்பை,

மாஜரின், சீனி, மா முட்டையாவற்றையும் கலந்து நன்முக அடிக்கவும். எல்லாம் ஒன்றுகக் கலந்தபின் சிறு சிறு உருண்டைகளாக்கித் தட்டையாகத் தட்டிக் கொள்ளவும். முந்திரிப் பருப்பை சிறு துண்டுகளாக நறுக்கி தூவிக் கொள்ளவும். தட்டையாகவுள்ள பிஸ்கட்டுகளை அவனில் இட்டு 'பேக்' பண்ணவும். 15 நிமிடங்களில் வெந்து விடும். பின் வாயில் போட்டால் உடனே கரையும், ருசியாகவும் இருக்கும்.

## தமிழ்வளர்த்த கிறிஸ்தவர் (26)

# இளமையிலேயே கவிபாடும் புலமை பெற்ற தமிழறிஞர்

யாழ்ப்பாணத்துக் கட்டைவேலி ஊரைச் சேர்ந்த பண்டிதர் ஜே. எஸ். ஆழ்வாப்பிள்ளை என்பவர், தமது பதின்மூன்றும் பராயத்திலே கவிபாடும் திறன்பெற்றவர். அவர் அவர் ஆக்கிய பாடல்களும், நூல்களும், கீர்த்தனைகளும், தேவாரங்களும் பலவாம். தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும் சிறந்தஅறிவுபெற்றவர். தமிழ் மூலம் சிங்களம் கற்பதற்கு உதவியாக "சிங்கள ஆசான்" என்னும் சிறந்த நூலை ஆக்கினர். இயல், இசை, நாடக துறையில் போதிய புலமை இவரிடம் இருந்தது. இவரது புலமை, சேவை என்பவற்றை மதித்த யாழ்ப்பாண இலக்கிய மன்றம் இவருக்கு "மூத்தமிழ்ப் புலவர்" என்ற பட்டத்தை வழங்கி, பொன்னாடைபோர்த்துக் கௌரவித்தது.

கிறிஸ்தவ வேதாகமத்தின் பல பகுதிகளை அழகிய பாக்களாகப் பாடினர். வேதாகம கதையைத் திரட்டி எடுத்து, "சத்திய வேதஅம்மானை" என அம்மானை வடிவாகப்பாடி வெளியிட்டார். நாட்டுப்புற மக்கள் தம் விழாக்களிலும், வைபவங்களிலும், அம்மானை வடிவில் வேத சத்தியத்தைப் பாடி மகிழ இந்நூல் பெருந்துணையாயிற்று. இவர் ஆக்கிய "கிறிஸ்தவ பஞ்சாமிர்தம்" என்னும் நூல் தேவாரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புகழ், திருவாசகம் என்னும் ஐந்து அமிர்தங்களைக் கொண்டது.

"கண்டேனுனதன்புக்கொரு
கரையோ எங்குமில்லையே
உண்டேனதை ருசித்தேனுனை
யுணரா துணர்ந்துய்ய
விண்டேன் புகழ்ப்பாமாலையில்
வெல்லையதின் விளக்கே
தொண்டே புரிந்திடுவே
னெனைச்
சூழ்ந்து தினம்பேனே"

"அப்பா உனதருளே
பரமானந்தத்தினூறுத்
தப்பாதென்று மோடுங்
கண்கள் தாமேதிறந்திருக்கும்
வெப்பும் பலவினை நோய்களும்
விட்டோடுமவ்வூற்றில்
எப்போது முன்னடியேன்
குளித் தின்பம்
பெறப்பேனே'

வண. எம். ஏ. இரத்தினராஜா

(6-ம் பக்கம் பார்க்க)

### இலங்கைப்படங்கள் வெற்றி பெருமைக்கு

# தமிழ்ப் பெண்கள் முன்வராததும் ஒரு காரணம்!

"இலங்கையில் தமிழ்ப் படங்கள் வெற்றியளிக்காமல் போனதற்கு முக்கிய காரணம் தமிழ்ப் பெண்கள் திறமையிருந்தும் சினிமாவில் நடிப்பதற்கு முன்வராமையும் ஒன்றாகும். இந்தியாவைப் பொறுத்தவரையில் பல்கலைக்கழகங்களில் பயின்றுகொண்டு சினிமாவில் நடிக்க ஒப்பந்தம்செய்து கொள்கிறார்கள். இந்நிலை சிங்கள சினிமாவிலும் உருவாகியுள்ளது. முன்னையகாலங்களில் இந்திய சினிமாவில் ஆண்களே பெண் வேஷங்கள் போட்டு நடித்தார்கள். இன்று அங்கு எப்படி நிலைமை மாறியுள்ளதைப்போல இலங்கையிலும் விரைவில் அப்படியொரு நிலைமை உருவாகும்"

இவ்வாறு பிரபல சிங்கள தமிழ் சினிமா தயாரிப்பாளரும் படப்பிடிப்பாளருமான ஜஹப். எம். ஏ. கபூர் யாழ்ப்பாணத்தில் வேகமாக வளர்ந்து வரும் "தெய்வம் தந்த வீடு" படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்தபோது, அளித்தபேட்டியில் கூறினார்.

"சினிமா வாழ்வில் ஈடுபட முன்னர் என்னசெய்துகொண்டிருந்தீர்கள்" என்று கேட்டேன்.

"நான் இலங்கையில் சினிமா துறையை வளர்க்கவேண்டுமென ஆவல்கொண்டிருந்தேன். இதன்காரணமாக 49-ம் ஆண்டு மன்னார் அயின் தியேட்டரில் ஒப்பரேற்றராக கடமைபுரிந்துவந்தேன். பின்னர் 67ம் ஆண்டு சிலோன் தியேட்டர்ஸ் நிறுவனத்தில் படப்பிடிப்பாளராக கடமையாற்றி இன்று சொந்தமாக திரைப்படத்துறையில் கடமையாற்றிவருகிறேன்.

இதுவரை எத்தனை படங்களுக்கு படப்பிடிப்பாளராகவும், தயாரிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளீர்கள்?

இதுவரை 75க்கு மேற்பட்ட தமிழ்,சிங்கள படங்களுக்கு படப்பிடிப்பாளராக இருந்துள்ளேன். இதில், டாக்ஸி ரைவர், மஞ்சள் குங்குமம், நிர்மலா, தெய்வம்தந்த வீடு ஆகியவற்றுக்கு நானே படப்பிடிப்பாளராகும். விரைவில் வெளிவரவிருக்கும் "தென்றலும் புயலும்" படமும் பெயரிடப்படாத ஒரு சிங்களப் படத்திற்கும் நான் தயாரிப்பாளராகவிருக்கிறேன். பாகிஸ்தான் - இலங்கை கூட்டுத் தயாரிப்பான "ரகஸ்ஹ மன் தரயை" திரைப்படத்துக்கும் நானே படப்பிடிப்பை செய்துள்ளேன்,

"இலங்கையில் தயாரிக்கப்பட்ட படங்கள் நஷ்டமடைந்தனவா?"

இதுவரை தயாரிக்கப்பட்ட ஒரு சில திரைப்படங்களைத் தவிர மற்றவையெல்லாம் முதலைக்காப்பாற்றியுள்ளன. புதிய காற்று, கோமாளிகள் லாபமீட்டியுள்ளன. சுமதி எங்கே, பொன்மணி, வெண்சங்கு, தோட்டக்காரி, கடமையின் எல்லை ஆகியவை நஷ்டமடைந்தவையாகும்.

## குறுகியகாலத் தயாரிப்பு

"தென்றலும் புயலும்" தயாரிப்புப் பற்றி சிறிது கூறுவீர்களா?

## படப்பிடிப்பாளர் ஜஹப் எம்.ஏ.கபூர் கூறுகிறார்

இப்படம் 17 நாட்களில் தயாரிக்கப்பட்ட படமாகும். இதில் டாக்டர் ஒருவரே டாக்டராக கதாநாயகனுக்கு நடிக்கின்றார். இப் படத்தை மற்றவர்களைப்போல தேவையற்ற செலவுகள் செய்யாமல் இரண்டு லட்ச ரூபாய் செலவில் தயாரித்துள்ளேன். இது ஓர் உணர்ச்சிமயமான கதை. கெட்டுப்போன தம்பியை வீட்டைவிட்டுத் துரத்தியும் சாகும்தறுவாயில் தன்னுடைய இதயத்தைப் பொருத்தி உயிர் பிழைக்கவைக்கும் அண்ணாவின் உணர்ச்சிக்காவியம். நாட்டில் கலவரங்கள் இடம் பெற்றதால் நினைத்தபடி திரையிடமுடியவில்லை. அடுத்த ஆண்டு பொங்கலுக்கு திரையிட முடிவுசெய்துள்ளோம்.

திரைப்படத்துறையில் மறக்கமுடியாத சம்பவம் ஒன்று கூறமுடியுமா?

"அனுஹஸ்" என்ற சிங்களப்படத்தை கதிர்காமத்தில் உள்ள காடொன்றில் படமாக்கிக்கொண்டிருந்தோம். படம்பிடிப்பில் ஈடுபட்டசமயம், பயங்கர சத்தத்துடன் யானை ஒன்று வருவதை உணர்ந்து படப்பிடிப்பை நிறுத்திவிட்டு காரொன்றினுள் அனைவரும் ஏறி பாதைக்கு வந்துவிட்டோம். சற்றுத் தாமதித்தால் இன்று உங்களுடன் பேசும் நிலையில் இருந்திருக்கமாட்டேன் என்று வாய்விட்டுச் சிரித்தார்.

தங்களுக்கு புகழைத் தேடிக்கொடுத்த திரைப்படம் யாது?

முன்னாள் அமைச்சர் இலங்கரத்தினவின் வாழ்க்கை வரலாறு "லசந்தா" என்னும் பெயரில் படமாகத் தயாரிக்கப்பட்டது. இப்படத்தின் படப்பிடிப்பை இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பாராட்டியுள்ளனர்.

சிங்களப்படங்கள் வெற்றியளிப்பது நடிப்பிலா அல்லது திறமையிலா?

சிங்களப் படங்கள் வெற்றியளிப்பதற்குக் காரணம் திறமையோ, நடிப்பிலோ தங்கியிருக்கவில்லை. தமிழ்நடிகைகளே சிங்களப் படங்களில் நடனம் ஆடுகின்றார்கள். திறமை தமிழ் நடிகைகளுக்கே. ஒரு சிங்களப் படம் 22 திரைகளில் திரையிடப்படுகிறது. ஒருமாதம் 22 திரைகளில் ஓடுமானால் 10 லட்சரூபாயை சம்பாதிக்க முடியும். ஆனால் தமிழ்ப்படங்கள் ஆறு திரைகளில்தான் திரையிடப்படுகின்றன.

## 'கோமாளிகள்' வெற்றிக்குக் காரணம்

கோமாளிகள் வெற்றிபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

கோமாளிகள் திரைப்படம் வெற்றிபெற்றமைக்கு காரணம் விளம்பரமேயொழிய கலைநுணுக்கமல்ல. 'கோமாளிகளி'லும் பார்க்க பலவகைகளிலும் 'காத்திருப்பேன் உனக்காக' தொழில்நுணுக்கம் சிறந்தது. திரைப்படங்கள் வெற்றியளிப்பதற்கு விளம்பரம் அவசியம் என்பதை 'கோமாளிகள்' உணர்த்துகின்றது.

இலங்கைத் திரைப்பட வளர்ச்சிக்கு எவ்வாறு உதவ முடியும்?

அரசு உடனடியாக பரிவர்த்தனை அடிப்படையில் இலங்கைத் திரைப்படங்களுக்குப் பதிலாகவே, இந்தியத் திரைப்படங்களை இறக்குமதிசெய்ய வேண்டும். இலங்கை நடிகர்களைக்கொண்டு கூட்டுத்தயாரிப்புகளை தயாரிக்கவேண்டும். குறைந்த செலவில் திரைப்படங்களை தயாரிக்கவேண்டும். இதன்மூலம் இலங்கைத் திரைப்பட உலகம் வளர்ச்சியடையமுடியும்.

சினிமாஸ்கோப் படங்களுக்குப் படப்பிடிப்பாளராக இருக்கிறீர்களா?

எனது முதல் படம் 'தெய்வம் தந்த வீடு' சினிமாஸ்கோப்பில் தயாராகின்றது. முன்னர் இலங்கையில் தயாரான 'நெஞ்சுக்கு நீதி' இடைநடுவில் நின்றுள்ளதால், இப்படம் இலங்கையில் வெளியாகும் முதல் சினிமாஸ்கோப் திரைப்படமாக இருக்குமென நம்புகிறேன்.

உள்ளூர் கலைஞர்களுக்கு மதிப்பளிப்பதற்காக ஈழநாடு"க்கு அவர் பாராட்டுத் தெரிவித்தார்.

**பேட்டி: ஐயா. சச்சிதானந்தம்**

# திருடர்க்கெல்லாம் — திருடன்!

**திருடர்கள் மலிந்து நாடு அல்லோல கல்லோலப்படும் இந்த வேளையில் திருடர்க்கெல்லாம் திருடன், கொள்ளையர்க்கெல்லாம் தலைமைக் கொள்ளைக்காரன் ஒருவனை பற்றி இக்கட்டுரை ஆசிரியர் பேசுகிறார். அவனைப் பிடிப்பதற்கான அடையாளங்களையும் தருகிறார். துப்பறியும் சிங்கங்கள் மட்டுமல்ல சாதாரண மனிதர்களும் அவனைப் பிடித்துவிடலாம் போலிருக்கிறது. எங்கே முயலுங்கள் பார்ப்போம்.**

எப்பொழுதும் காலையில் புதினப்பத்திரிகையைக் கையிலெடுத்தவுடன் நேற்று எந்த வங்கியில் கொள்ளை? எத்தனை கார்கள் களவாடப்பட்டன? எத்தனை தாலிக்கொடிகள் அறுக்கப்பட்டன? என்ற புதினங்கள்தான் பெரிய கொட்டை எழுத்துக்களில் கண்களைக் கவருகின்றன.

பொலிஸ் உத்தியோகத்தர்களும், சி. ஐ. டி. மார்களும் ரோந்து செய்வதிலும், துப்புத் துலக்குவதிலும் தங்கள் நேரத்தைச் செலவழிக்கின்றார்கள். சில கள்ளர்களைக் கைதுசெய்தும் இருக்கின்றார்கள்.

ஆனால் எங்கள் மத்தியிலிருக்கும் பெரிய கள்ளர் கூட்டத்தைப் பற்றி இன்னும் உத்தியோகத்தர்கள்கவனஞ்செலுத்தியதாகத் தெரியவில்லை. முன்னொரு காலத்தில் "இரட்டையர்கள்" என்று இரணைச்சகோதரர்கள் இருவர்இருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்குக்கண் குருடு; மற்றவனுக்குக் கால் நொண்டி. குருடன்நொண்டிச் சகோதரனைத் தனதுதோளிற் காவிக்கொண்டு செல்வதுவழக்கம். இருவரும் பெரிய புலவர்கள். ஆனால் பரம ஏழைகள். "சென்று இரந்தும்", "பாட்டிசைத்தும்" தங்கள் சீவி

### ஆனைக்கோட்டை 'திருவன்'

யத்தை நடாத்தினார்கள். ஒருநாள் அவர்கள், அன்று தாங்கள் பிச்சையெடுத்தபணத்தை முடிச்சாகப் பழந்துணி ஒன்றில் முடிந்து, வேறு வைக்கும் இடமில்லாதபடியால் அங்கிருந்த பிள்ளையார் கோவிலில் உள்ள விநாயகர் விக்கிரகத்தின் பின்னால்மறைத்து வைத்து வைத்துவிட்டு, கோவிலுக்கருகிலுள்ள குளத்தில் குளிக்கப் போனார்கள். அவர்கள் ஸ்நானம் முடிந்து வருவதற்குமுன் பழந்துணி முடிச்சை யாரோ அவிழ்த்து, துணியை எறிந்துவிட்டுப் பணத்தைக்கள்வாகக் கொண்டுசென்றுவிட்டார்கள், துணியை எடுத்துப் பார்த்த இரட்டையர்கள், பிள்ளையாரில் பழியைப்போட்டு ஒரு நிந்தாஸ்துதி பாடினார்கள்.

"தம்பியோ பெண்திருடி  
தாயாருடன் பிறந்த  
வம்பனே நெய்திருடும்  
மாயவன்காண் இப்புவியில்  
மூத்தபிள்ளையாரே முடிச்சு  
அவிட்டுக் கொண்டீரோ  
கோத்திரத்துக்குள்ள  
குணம்".

இந்தக் கள்ளக்கோத்திரத்தைச் சேர்ந்தவர்களை எங்கள் துப்பறியும் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யவிரும்பினால், 'தம்பியை' நல்லூரிலும், 'தாயாருடன் பிறந்தவம்பனை' பொன்னாலையிலும் அல்லது வண்ணார் பண்ணையிலும், 'மூத்த பிள்ளையாரை' மானிப்பாய் மருதடியிலும் அல்லது முறிகண்டியிலும் காணலாம். ஆனால் அவர்களை இலேசில் கண்டுபிடிக்க முடியாது. மிகவும் கவனமாக அவர்களைத் தேடிப் பொலிஸ்உத்தியோகத்தர்கள் மாத்திரமல்ல,கொழும்பிலிருந்து பெரிய சுப்பிரீம் கோட்டு நீதிபதிகள், மந்திரிமார் (ஏன் பிரதமமந்திரிகள் கூட) வருவார்கள். அவர்கள் ஒளித்துக் கொள்வார்கள். அவர்களைக் கண்டுபிடித்தல் இலேசான காரியமல்ல. "அதோ தெரிகிறான் பிடி! பிடி!!" என்று சொல்ல முன்னர் அவர்கள் கம்பிநீட்டிவிடுவார்கள்.

மேலே சொல்லப்பட்ட இரட்டையர்கள் இக்கள்ளக் கூட்டம் எல்லாவற்றிற்கும் தலைவனாக உள்ளவனும், எங்கள் ஒவ்வொருவரோடும் 'உள்ளொடு புறம்கீழ் மேலாய் உயிர் தொறும் ஒளித்து நிற்பவனுகிய' பெரியகள்ளனைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்டார்கள். அவனுக்கு ஊர் இல்லை, தாயில்லை, தந்தையில்லை. ஆனால் ஆயிரம் பெயர்கள் உண்டு. (ALIAS) வேண்டிய வடிவம் கொள்வான். அவன் களவெடுக்கும் சாமான் வங்கிப்பணமல்ல; தாலிக்கொடியல்ல; மோட்டார்க் காரல்ல; மனிதனுக்கு மிகவும் முக்கியமான ஒரு பொருள்.

மனிதன் தனது புலன்களினால் உலகத்தை அறிகின்றான். புலன்கள் அவனுடைய உள்ளத்தில்தான். இந்த உலகப் பொருள் சகலவற்றையும் அவனைக் காணும்படியும், அனுபவிக்கும்படியும் செய்கின்றன. இக்கள்ளர் கூட்டத்திற்குத்

(6-ம் பக்கம் பார்க்க)



# விவசாயத் துறையில் மகத்தான சாதனைகளைப் புரிந்துவரும் சீன மக்கள்

**கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக சீனாவில் பீகிங் வானொலியில் கடமையாற்றிவருபவரான திரு. வி. சின்னத்தம்பி இப்பொழுது இலங்கை வந்துள்ளார். சீனாவில் பல இடங்களுக்குச் சென்று புரட்சிக்குப் பின் அந்நாட்டு மக்கள் ஈட்டிவரும் மகத்தான சாதனைகளை நேரில் கண்டவரான அவரை அண்மையில் நமது நெல்லியடி நிருபர் ஆ. சிவஞானம் சந்தித்தார். அவரிடமிருந்து பெற்ற தகவல்களை நிருபர் இங்கு கட்டுரையாகத் தருகின்றார்.**

1949-ம் ஆண்டிற்குமுன் சீன நாட்டு விவசாயிகள் மிகவும் மோசமான வாழ்க்கையினை நடாத்தி வந்தார்கள். அதிகாரவர்க்கத்தினரால் சுரண்டப்பட்ட விவசாயிகள் மேலும் மேலும் நசுக்கப்பட்டார்கள். கொல்லாமல் கொல்லப்பட்டுவந்தார்கள் என அந்நிலையினைக் குறிப்பிடலாம். இந்த மோசமான வாழ்வை தொடர்ந்தும் சகித்துக் கொள்ள சீன விவசாயிகள் விரும்பவில்லை. இதன் காரணமாக கம்யூனிஸ்ட் கட்சியினதும் மாவோவினதும் தலைமையின் கீழ் ஒன்றுதிரண்டு, தொடர்ச்சியானதும் வீரஞ் செறிந்தது மானபோராட்டங்களை நடாத்தி, தம்மை அதிகார வர்க்கத்திலிருந்தும் சுரண்டலிருந்தும் விடுவித்துக்கொண்டு விடுதலையைப் பெற்றார்கள்.

### போராட உறுதி

சீனப்புரட்சி வெற்றிபெற்ற பின்பும், உள்நாட்டு வெளிநாட்டு சுரண்டல்காரர்கள் மீது தமது கண்ணோட்டத்தை சீன விவசாயிகள் விட்டுவிடவில்லை. இன்றுவரையும் விட்டுக்கொடுக்காததும்திரமானதுமான போராட்டங்களையு நடாத்தி வருகின்றார்கள். கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலே இயங்கிவரும் இவர்கள் நாட்டின் நிர்மாண வேலைகளிலும் ஈடுபட்டு உழைப்பது டன் போராட்ட உறுதி கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்.

### 'கம்யூன்' அமைப்பு

சுயசார்பு என்பது சீன விவசாயிகளின் தாரகமந்திரமாகும். விவசாயிகள் கூட்டமைப்பில் வாழ்கின்றார்கள் இந்தக் கூட்டமைப்பை 'கம்யூன்' என பெயரிட்டு அழைப்பார்கள். இந்தக் கம்யூனுக்கு அரசானது போதிய அதிகாரங்களை வழங்கியுள்ளது. இதன் மூலம் சீன அரசு தனது அதிகாரத்தைப் பரவலாக்கியுள்ளது. விவசாயிகளுக்கு அரசியல் வகுப்புக்களை இந்தக் கம்யூன் அமைப்புக்கள் நடாத்தி அரசியல் அறிவை வளர்க்கின்றது. வகுப்புக்களை வைப்பதன் மூலம் அரசியல் அறிவுபெற்ற விவசாயிகள் அணிதிரட்டப்படுகிறார்கள். அணிதிரட்டப்பட்டோர் நாட்டின் அபிவிருத்தித்திட்டங்களுக்குப் பயன்படுத்தப் படுகின்றார்கள். கம்யூன் அமைப்புக்கள் விவசாயத்திற்குவேண்டிய உபகரணங்களையும், சிமெந்து உற்பத்திசெய்யும் ஆலைகளையும் உருவாக்கி வருவதுடன் சிறந்த நிர்வாகத்தையும் நடாத்துகின்றது.

விவசாயிகள் அறுவடை காலத்தில் உற்பத்திப் பொருட்களை அரசிற்கு விற்பனைசெய்கின்றார்கள். தமது தேவைக்கு ஏற்ப தொகையை வைத்துக்கொண்டு மிகுதியாகவுள்ள தொகையினைத்தான் அரசிற்கு விற்பனை செய்வார்கள். எதிர்கால நன்மையை நோக்கமாகக் கொண்டு உற்பத்தியின் ஒரு பகுதியை 'கம்யூனின்' சேகரிப்பில் வைத்துக்கொள்கிறார்கள். உற்பத்தி குறைந்த காலத்தில் அல்லது நெருக்கடி காலத்தில் இச்சேமிப்பு பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு குடும்பமும் வேலை செய்ததற்கு ஏற்பவே இச் சேமிப்பு பங்கீடுசெய்யப்படும். அரசிற்கு உற்பத்திப் பொருட்களை விற்றுப் பெற்ற பணத்தைக்கொண்டு விவசாயிகள் தமக்குத் தேவையான யந்திரங்களைக் கொள்வனவுசெய்கின்றார்கள். நீர்ப்பாசனம் போன்ற பாரிய திட்டங்களை மத்திய அரசே ஏற்படுத்திக் கொடுப்பதுடன் நிதியுதவியும் அளித்துவருகின்றது.

### நவீன ரக விவசாயக் கிராமம்

வட சீனாவில் தாங்சாய் என்னும் ஒரு மலைக் கிராமமுள்ளது. இது ஒரு புதிய ரக விவசாயக் கிராமமாகும். இங்குள்ள விவசாயிகள் புரட்சிக் கட்டுப்பாட்டுடனும் விவசாயச் செழிப்புடனும் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த நவீன ரக விவசாயக்கிராமம் சீனாவிலுள்ள மற்றைய மாவட்டங்களிலுள்ள கிராமங்களுக்குப் போட்டியாகத் திகழ்கின்றது. இங்கு முதன் முதல் அல்லது மூதலாம் முறை சென்றவர் மறுமுறை செல்லும் போது மூக்கின் மேலேயே விரலை வைப்பார்கள். ஏனெனில் நாளொரு வண்ணம் இக்கிராமம் வளர்ச்சியடைந்துவருகின்றது. ஒரு முறை சென்றவர் மலைகளையோ குன்றுகளையோ கண்டிருப்பாராயின் மறுமுறை செல்லும்போது அவைகளைக் காணமாட்டார். அவைகள் அழிக்கப்பட்டு நெல்வயல்களாகவும் கோதுமைப் பிரதேசங்களாகவும் மாற்றப்பட்டுவிடும். பள்ளத் தாக்குகளைக்கூட விட்டுவைக்காமல் தம் முயற்சியை தொடருவார்கள். அங்ஙனமாக இக் கிராம விவசாயிகள் நாட்டின் உற்பத்தியில் கவனம்செலுத்துகின்றார்கள்.

### பிரதமரும் விவசாயி

சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த சென்யுங்குவேய் இன்று சீன நாட்டு துணைப் பிரதமர்களுள் ஒருவராவர். இவரின் தந்தை சீன நாட்டின் விடுதலைக்கு முன் கடன்தொல்லையால் அவதியுற்று தற்கொலை செய்து கொண்டவர் அதனால் சென்யுங்குவேயின் குடும்பம் ஏழ்மையில் வாடியது. இப்படியாக ஏழையாக - விவசாயியாக வாழ்ந்த இவர் நாட்டின் பெரிய பதவிகளில் ஒன்றை கைப்பற்றிக்கொண்டார். தற்போது பிச்சைக்காரன் நாட்டின் உயர்பதவியில் வீற்றிருக்கின்றான் என்பதை எண்ணி சீன விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கின்றார்கள், சென்யுங்குவேய் தனக்கென எந்தச் சலுகைகளையும் நாடாது, சமயம் கிடைக்கும்போதெல்லாம் விவசாய வேலையிலேயே ஈடுபட்டு வருகின்றார், சென்யுங்குவேய் போன்றவர்கள் சீன விவசாயிகளின் வாழ்வில் ஏற்பட்ட உயர்ச்சியைப் பிரதிபலிக்கும் பிரதிநிதிகளாக விளங்குகின்றார்கள்.

### கலாசாரப்புரட்சியும் விவசாயிகளும்

உலக நாடுகளின் பலத்த விமர்சனத்திற்கு உள்ளடக்கப்பட்ட சீனாவின் கலாச்சாரப் புரட்சி, சீன விவசாயிகளின் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது இக் கலாச்சாரப் புரட்சியின்போது விவசாயிகள் மேலும் அறிவைப் பெற்றார்கள். விவசாயம் தேசிய பொருளாதாரத்தின் அடிப்படை என்பதையும், நீர்ப்பாசனம் விவசாயத்தின் உயிர் நாடி என்பதையும் அறிந்து கொண்டார்கள். நாடுபூராவிலும் ஏற்படுகின்ற புரட்சிகர மாற்றங்களை பரஸ்பரம் பரிமாறிக்கொள்ளவும் கற்றுக் கொள்வதுடன் பழகியும் கொண்டார்கள்.

கலாச்சார புரட்சியின்போது கல்வி, மருத்துவம், கலைகலாச்சாரம் என்பன அனைத்தும் விவசாயிகளுக்கு சேவைசெய்ய வேண்டுமென தலைவர் மாவோ உத்தரவிட்டிருந்தார். அதன்படி மக்கள் தினசரிகள், வானொலிகள், மற்றும் தாபனங்களும் விவசாயிகளுக்காக மேலும் தம்மால் இயன்றரையில் உழைத்து வந்தன - வருகின்றன. இத்துறைகளில் நடைபெற்ற தீவிர புரட்சி என்பது உண்மையில் அவை விவசாயத்திற்கு சேவைசெய்யும் திசையில் ஆழமான ஊடுருவலையே குறிக்கும்.

1949-ம் ஆண்டில் விடுதலைப் புரட்சிவெற்றிபெற்றபின் "இன்னும் எமது பிரச்சினை சீனாவின் 50 கோடி விவசாயிகளின் பிரச்சினையே ஆகும்"

(7-ம் பக்கம் பார்க்க)

## இளமையிலே

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

"என் பாவமெனைக்
கண்டு பிடித்ததாலே
இடருழந்து தத்தளுத்தே
னெனக்காய் வேண்டி
அன்பாகச் சிலுவையதிற்
பிராண யாகம்
ஆற்றினையென்றறிந்ததனு
லோடி வந்து
முன்பாக விழுந்து
நமஸ்கரித்து நின்று
முறையிட்டேன் பாவியென
முனியா தென்னை
நின்பாகத் தரவணைத்
நாயதனுமினஞ்சம்
நிம்மதி கொண்டேன்
மறவேன் சரணம் நீயே"

என்னும் இனிய பாடல்கள், கிறிஸ்தவபக்தியையும் விசுவாசத்தையும் எடுத்துக்காட்டுவனவாம் புலவர் அவர்கள் ஆக்கிய "நசரேயப்பாமாலை" "நசரேய இரட்டை மணிமாலை" "நசரேய மும்மணிக்கோவை" "நசரேய அந்தாதி" என்னும் நூல்கள், கிறிஸ்து பெருமானின வாழ்க்கையையும் உபதேசங்களையும் அழகுறக்கூறும் அரிய நூல்களாம்.

மனுஷன் கடவுளை மறந்தாலும், கடவுளோ மனுஷனை மறப்பதில்லை அவன் எங்கு ஓடினாலும், அவனை அவரே தேடுகிறார். கடவுளுக்கு ஒளித்து மனுஷன் ஓடிமறைய முடியாது. அவ்வித ஓட்டத்தால், அவனே ஒடிந்து, இளைத்து, தேய்ந்து விடுகிறான். தன்னைத் தேடிப்பிடித்த அன்புக்கு அவன் தன்னை அர்ப்பணித்தே ஆகவேண்டும். இது ஓர் கிறிஸ்தவ சத்தியம். இவ்வுண்மையை,

"அண்டியெனை ஒரு கணமும்
விட்டு நீங்கா
அன்பேமிறன் தொய்ந்
திட்டவ வான்யா தன்னை
இன்றுமது வசமாற்றுப்
படுத்துகின்றேன்
இனிவாயும் சாகரத்திழுழந்
தேடித்
கண்டங்கு நிரப்பிப்பூ
ரணமாயோடக்
கனிவாக நீர்த்த
உமது ஜீவன்
துண்டாகவு மக்கே
யொப்படைக்கின்றேன் சேர்
துதிகளெலாமு
மக்கென்றும்
சொந்தமையா"

என்னும் பரவசப் பாடல் மூலம் பகர்கிறார் புலவர். இவை போன்ற பக்திரசம் ததும்பும் பாடல்கள் பல புலவர் இயற்றிய "கிறிஸ்தவ பஞ்சாமிர்தம்". என்னும் நூலில் இடம் பெறுகின்றன.

(தொடரும்)

## திருடர்க்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைவணுகிய பெருங்கள்வன் ஒரு மனிதனுடைய உள்ளத்தையே களவாடி விடுவான். அந்தக் கள்வனைப் பற்றித் துப்பறியும் உத்தியோகத்தர்களுக்குச் சில விபரங்களைச் சொல்ல விரும்புகின்றேன்.

"தோடுடைய செவியன்
விடை ஏறி ஓர்
தூ வெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி
பூசி என்
உள்ளம் கவர் கள்வன்
ஏடுடைய மலரான்
முனை நாள் பணிந்து
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய
பெம்மான் இவன்
அன்றே".

ஒருவேளை இதை வாசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இந்தியாவிலிருக்கும் பிரமாபுரத்திற்கு எக்ஸ்தடிசன் உவோறன்ற் (EXTRADITION WARRANT) எடுத்துக்கொண்டு ஓடக்கூடும். ஆனால் அக்கள்வனைக் கைதுசெய்தல் இலேசான காரியமல்ல. ஒளித்துக்கொள்வான்; பிடிபட்டவுடன் கூட மறைந்துவிடுவான்.

தென்னிந்தியாவில் "கள்ளர்" என்ற சாதியினரேஇருக்கின்றார்கள் சிறிது காலத்திற்கு முன்னர், பிராமணர்கள் தங்கள் பெயருக்குப் பின் 'ஐயர்' அல்லது 'ஐயங்கார்' என்றும், வேளாளர்கள் 'பிள்ளை' அல்லது 'முதலியார்' என்று சேர்த்துக்கொள்வது போல 'கள்ளர்' என்ற சாதியைச் சேர்ந்தவர்கள் 'தேவர்' என்று தங்கள் பெயருக்குப் பின் சேர்க்கும் ஒரு வழக்கம் இருந்ததென்று நினைக்கின்றேன். நான் மேலே சொல்லிய பெரியகள்ளன் எல்லாருக்கும் ஒளித்துத்தனது அடியார்களோடு மாத்திரம் கலந்து கொள்வான். அவனுக்குப் பெயர் 'தேவதேவன்' அவனைத் துப்பறியும் உத்தியோகத்தர்கள் கண்டுபிடித்துவிட்டால் வங்கிக் கொள்ளையல்ல, தாலிக்கொடி அறுத்தலல்ல, மோட்டார்க்கார் களவல்ல இந்த உலகத்திலுள்ள எத்தனையோ இரகசியங்களை வெளிப்படுத்தலாம்.

"கற்பகங்கள் பலகோடி
செல்லத்திய
கனவில் நடுவூசியின்
மேற காலையூன்றிப்
பொற்பற மெய்யுணர்வின்றி
யுறக்கமின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்பட
வைம் பொறியை யோப்பி
நிற்பவருக் கொளித்துபறைக்
கொளித்து போக
நின்முனிவர்க்
கொளித்தமரர்க்
கொளித்து மேலாஞ்
இற்பதந்திஞ் சின்மயமாய்
நிறைந்தஞானத்
திருவளருட் கலந்த
'தேவதேவே".

கண்டுபிடியுங்கள் பார்ப்போம் கண்டுபிடித்தால் அவனை ஓடவிடாமல் கைவிலங்கு, காலில்விலங்கிட்டு நல்ல THIRD DEGREE TREATMENT கொடுத்தால் தான் முன்னிற்பான்.

"உறவுக்கோல் நட்டு
உணர்வுக்கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய
முன்னிற்குமே".

## என் கவியின் கருவாக நீ மாறவேண்டும்!

ஏடெடுத்து நான் கவிதை எழுதவேண்டும்.
என் கவியின் கருவாக நீ மாறவேண்டும்
பாடுபடும் உந்தனுக்கு நல்ல வாழ்வு
பாரிதனில் பறந்தோடி வரவும் வேண்டும்!

தெருத் தெருவாய் கால்கள் தேய வண்டியோட்டி
தெருவினிலே ஏழை நீ படுக்கும்போது
பருத்த வுடல் பணக்காரர் கூடியுன்னைப்
பழிக்காது அழைத்தவர்கள் பழகவேண்டும்:

மங்கையரை மதி நிலவைப் பாடியென்ன
மலர்தனைக் குரைகடலைப் பாடியென்ன'
உண்ணவொரு வழியற்ற உந்தனுக்கு
உயர்வற்ற வாழ் விங்கு இருக்கும்போது!

தூய நெறி ஏட்டிலிருந்தென்ன லாபம்
தூயவர்கள் துயரடைந்து சோரும் போது
வாழ வழியற்ற தொழிலாள நண்ப
வர்க்கமது வகையற்று வாடும் போது!

—சுப்ரமணியன்

## நோய்களைத்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யார் அங்கிருக்கிறார். அதைதான் உணர்கிறேன் என்றார். உன் தகப்பனார் காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு என்னென்ன மருந்துகள் கொடுப்பார் என்று என் மனதில் தோன்றுகிறது என்று கூறிய இவருடைய தாயார் நேராக மருந்துக்கடைக்குப் போய் தானே மருந்துகளை வாங்கி வந்து தன் மகனுக்குச் சிகிச்சை செய்தார். இதற்கு முன் இவர் எப்போதும் இப்படிச் செய்ததில்லை. ஒரே ஒரு நாள் மட்டும் படுக்கையிலிருந்த அட்கின்சின் மனநிலையே பள்ளிச் சோதனையில் பாக்கு கொண்டு சித்தியடைந்தார். இறந்துபோன தன்னுடைய தகப்பனுடைய ஆவியே அங்கு வந்து தன் தாயாரின் மனதில் சிகிச்சை முறைகளைப் புகுத்தியிருக்கவேண்டுமென்று இவர் இப்போதும் உறுதியாக நம்புகிறார்.

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
**"HOLIDAY ON THE BUSES"**
Full Comedy color

**French Film Festival**
Daily at 4-45 7 & 9-30 P. M. only
18-11-77 WOMAN AT HER WINDOW
21-11-77 MONSIEUR PAPA
23-11-77 COUSIN COUSINE

**மனோஹரா** (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-ஜெமினி கணேசன்
சுப்பையா - லக்ஷ்மி - நிர்மலா
நடிக்கும்
சுஜாதாவின்
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** இன்று மட்டும்
(யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
போன்: 7642
**அகத்தியர்**
புராண வண்ணச் சித்திரம் — புத்தம்புதிய பிரதி
நாளை முதல் கே. பாலசந்தரின்...
**சொல்லத்தான் நினைக்கிறேன்**
(புத்தம் புதிய பிரதி)

கடைசி வாரம்
**ராணி** ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
(யாழ்ப்பாணம்) முத்துராமன் - நாகேஷ் - சச்சு
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
**துணிவே துணை**

**றீகோ** எம். ஜி. ஆர். — லதா நடித்த
(யாழ்.நகர்) போன்; 7693
**நீதிக்கு தலைவணங்கு**

கடைசி வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
**வின்ஸர்** சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்ப்பாணம்) சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
**அன்னக்கிளி**


பாடசாலை நூலகங்கள்—(4)

# நூலகங்களுக்கு ஏற்ற நூல்கள்

— கவிஞர் வி. கந்தவனம்—

பாடசாலை நூலகங்களுக்கு நூல்களைத் தெரிவு செய்வதில் அதிக கவனம் செலுத்துதல் அவசியமாகும். பாடசாலை நூலகங்களில் மாணவர்களுக்குப் பயன்படாத உயர்கல்வி நூல்களையோ, ஆராய்ச்சிப் பெருநூல்களையோ வாங்கி அடுக்கி வைப்பதிற் பயனொன்றில்லை மேலும் எமது நாட்டின் பாடசாலை நூலகங்கள் பலவற்றில் ஆங்கில நூல்களே இன்றும் அதிகமாகக் காணப்படுகின்றன. தாய்மொழியில் கல்வி புகட்டப்படும் இக்காலத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற நூல்கள் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு அதிகம் உதவமாட்டா.

பாடசாலை நூலகங்கள் பெரிதும் மாணவர்க்குரியன. மாணவர்கள் நூலகங்களை நன்கு பயன்படுத்தவேண்டுமானால் மாணவர்களுக்கு ஏற்ற நூல்கள் அங்கு இருத்தல் வேண்டும்.

ஏற்ற நூல்கள் என்பன;

(1) பாடசாலையிலே படிப்பிக்கும் பாடங்கள்.
(2) அங்குள்ள வகுப்புநிலைகள்.
(3) பிள்ளைகளின் வயது மட்டங்கள்.
(4) பாடசாலை அமைந்துள்ள சூழல்.
(5) அந்தச் சூழலின் விழுமியங்கள், எதிர்பார்ப்புக்கள்.
(6) பிள்ளைகளின் அபிலாசைகள், உளச்சார்புகள், நாட்டங்கள்.
(7) எல்லாவற்றுக்கும் மேலாகக் கல்வி,மொழி போன்றவற்றைஅளாவவல்ல நூல்களாம்.

மேலும் நூல்களைத் தெரிவு செய்கின்றபொழுது அவற்றின் உள்ளடக்கத்திலும் கவனஞ்செலுத்துதல் வேண்டும். நூல்கள் கருத்துவளம் மிகுந்தவையாகவும், கற்பனையைத் தூண்டவல்லனவாகவும், பிள்ளைகளின் ஆற்றலை வளர்த்து ஆளுமையைச் சீர்பெறச்செய்யத் தக்கவையாகவும் இருத்தல்வேண்டும்.

நூல்கள் சிறப்பான செய்திகளையும் சரியான தகவல்களையும் கொண்டிருத்தல்வேண்டும். எடுத்துக்கொண்ட பொருள்களை இக்கால உத்திமுறைகளைக் கையாண்டு எடுப்பாக விளக்கும் நூல்கள் விரும்பத்தக்கவை.

நூல்அமைப்பு முறையிலும் கவனஞ்செலுத்துதல் நன்று. கருத்துக்கள் எவ்வளவுதான் உயர்வாக இருந்தபோதிலும் அக் கருத்துக்கள் சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு நூலாக்கப்படவில்லையென்றால், அந்நூல்களை வாங்காமல் விடுதல் நல்லது. பல அதிபர்கள் ஒதுக்கப்பட்ட வசதிப்பணத்தில் அதிக நூல்களை வாங்கிவிடவேண்டும் என்றே சிந்திக்கின்றார்கள். நூல் அமைப்பில் அதிக கவனம் செலுத்துவதில்லை. 'அதற்கான பிரதான காரணம் சிறந்த அமைப்புள்ள நூல்கள் அதிக விலையாகவிருப்பதேயாகும். அதிக விலையாக இருந்தாலும் கூட,

[1] தரமான காகிதம்
[2] அழகான உள்ளமைப்பு
[3] வாசிக்கைக்குகந்த எழுத்துக்கள்
[4] கவர்ச்சியான அட்டை
[5] உறுதியான கட்டு

என்பவற்றோடு கூடிய நூல்களையே வாங்குதல்வெண்டும். அத்தகைய நூல்களே பிள்ளைகளைக் கவரவல்லன. அத்தகைய நூல்களுக்கே பிள்ளைகளிடத்தில் வாசிக்கும் பழக்கத்தைத் தூண்டும் சக்தி உண்டென்பது கல்வி வல்லாளர் கருத்து.

புத்தகக்கடைகளில் இருக்கின்ற நூல்களை வாங்குதலை விடுத்து, நூலகத்துக்குத் தேவையான நூல்களைத் தேடிவாங்குதலே விரும்பத்தக்கது. உள்ள நூல்களைச் சேர்ப்பதிலும் உரிய நூல்களைத் தெரிவுசெய்தலே பயனுடைத்து. நூல்களைத் தெரிவு செய்வதில் தனது பாடசாலையிலுள்ள எல்லா ஆசிரியர்களினதும் ஆலோசனைகளைப் பெறுவது ஓர் அதிபரின் கடனாகும். மாணவர்களின் உளச்சார்புகளையும் நாட்டங்களையும் மதிப்பிட்டு அவற்றுக்கு உதவவல்ல நூல்களைத் தெரிவு செய்ய அதிபருக்கு உதவுவது ஆசிரியர்களது பொறுப்பாகும். நூல்களைத் தெரிவுசெய்யும் உரிமை மாணவர்களுக்கும் தரப்படுதல்வேண்டும். அவர்களது தெரிவுகளை நூலகத்தில் இடம்பெறச்செய்வதன்மூலம் நூலகத்தையும் மாணவர்களையும்மிக எளிதாக ஒன்றிணைத்து விடலாம்.

தேவையான புத்தகங்களைத் தெரிவுசெய்யப் பின்வரும் பிரசுரங்கள் உதவவல்லன:

1. பிரசுரிப்பாளர் பட்டியல்கள்.
2. இலங்கைத் தேசியப் புத்தக விவரணம்[Bibiliography].
3. இந்தியத் தேசியப் புத்தக விவரணம்.
4. பிரிட்டிஷ் தேசியப் புத்தக விவரணம்.
5. சஞ்சிகைகளில் வரும் புத்தக விமர்சனங்கள்.
6. விளம்பரங்கள்.
7. தினசரிகளின் புத்தக அனுபந்தங்கள்.
8. பிரிட்டிஷ் புத்தகச் செய்திகள்.
9. 'சிறுவர் நூல்தட்டு' என்னும் சஞ்சிகை (The Junior Book Shelf).
10. கென்ட் கல்வி நூற் பட்டியல் (Kent Education Book -List).
11. வில்லிங்ஸ் அழுத்தகத் துணை (Willings Press Guide).
12. உள்ளூர்ப் புத்தகசாலைகளின் பட்டியல்கள்.

## விவசாயத்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தலைவர் மாவோ கூறினார். அடிக்கடி நோய்களாலும், பஞ்சங்களாலும் அழிந்து வந்த பல்லாயிரக்கணக்கான சீன விவசாயிகள் இன்றைய உலகிலே அத்தியாவசியமான உணவு, உடை வசிப்பிடம் ஆகியவற்றினை பெற்று மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

நாட்டின் ஜனத்தொகைப் பெருக்கம் நாட்டின் உற்பத்தியைப் பாதிக்கும்'' என்ற கூற்றை சீன விவசாயிகள் மழுங்கடித்து உள்ளனர். ஜனப்பெருக்கத்தை உற்பத்தியை அதிகரிக்க பயன்படுத்தலாம் என்பவை சீன விவசாயிகள் உலக நாடுகளுக்கு எடுத்துக்காட்டிவருகின்றார்கள். சீன விவசாயி அவர்களின் முயற்சிக்காகவும் உயர்சிக்காகவும் பாராட்டும் அதே நேரம் நாமும் அவர்களைப் போல உற்பத்திதுறைகளில் ஈடுபட்டு நம் நாட்டு உயர்வுக்கு உழைக்கவேண்டும்.


**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
முத்துராமன்-சுஜாதா
**வாழ்ந்து காட்டுகிறேன்**

**றியோ** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
மாலாசின்க - சன்ஜே
**தில்லகி**
(ஹிந்தி)

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்-லதா
**உழைக்கும் கரங்கள்**

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
**உலகம் சுற்றும் வாலிபன்**
(கலர்)

ஐந்தாவது வெற்றி வாரம்!
**ராஜா-** யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின்
அற்புதப் படைப்பு!
ஜெமினி, ஜெயசித்திரா கே. ஆர். விஜயா
நடித்த
**தசாவதாரம்**
(கலர்)
(கண்ணபிரானின் பத்து அவதாரங்கள்)
[பாடசாலை மாணவர்கள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளலாம்]





புனித பத்திரிசியார் கல்லூரி சாரண இயக்கத்தின் 10-வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில், 10 வருடங்கள் சேவைபுரிந்த சாரணத்தலைவர் திரு ஞா. ஞசைதாசன் யாழ். மாவட்ட சாரண ஆணையாளர் சி. கந்தமூர்த்தியிடமிருந்து சான்றிதழையும் வெள்ளிக்கிண்ணத்தையும் பரிசாகப் பெறுகின்றார்.

# இருதலைக்கொள்ளி எறும்புகள்

(நமது அரசியல் நிருபர்)

கொழும்பு மத்திய தொகுதியில் மூன்று ஸ்தானங்களில் ஒன்றுக்கு மலையகத் தமிழரான திரு. செல்லச்சாமி முதல்முதலாகப் போட்டியிட்டார். உற்சாகம் அதிகமிருந்தது. ஆனால் அவர் வெல்லமுடியவில்லை.

தலைநகரில் தமிழர் வெகுவாக வசிப்பதால் அவர்களுக்கு ஒரு ஸ்தானமாவது கிடைக்க வேண்டுமென்றே இத்தொகுதியை மூன்று மெம்பர் தொகுதியாகத் தொகுதி நிர்ணயக் கமிஷன் வகுத்தது. என்றாலும் அக்கமிஷனின் நோக்கம் இதுவரை நிறைவேறமுடியவில்லை. ஒரு தமிழ்ப் பிரதிநிதியும் இத்தொகுதியில் இதுவரை தெரிவு செய்யப்படாமற் போயிற்று.

இம்முறை மலையகத் தமிழரான திரு. செல்லச்சாமி துணிச்சலுடன் போட்டியிட்டார். அவர் வெற்றிபெற்றிருந்தால், கொழும்பு மத்திய தொகுதியில் ஒரு தமிழரும் உயிர் தப்பியிருக்கமுடியாதென்றும், அது தமிழரின் படுகளமாகி இருக்குமென்றும், "நல்லவேளையாக இங்கு சேவல் செத்தது" என்றும் சில தமிழர்களே வாய்விட்டுக் கூறியதைக் கேட்க வியப்பாக இருந்தது. மலைநாட்டில் பல தொகுதிகளில் தோட்டத் தொழிலாளருக்கு ஏற்பட்ட கதி கொழும்புத் தமிழருக்கும் ஏற்பபட்டிருக்குமென்று அஞ்சியதற்கு ஆதாரம் இல்லாமல் இல்லை. இதைக் கருதியே பல தமிழ் வாக்குகளும் திரு. பிரேமதாசாவுக்கே பதிவுசெய்யப்பட்டதென்பது பகிரங்க ரகசியம்.

சாதாரணமாகச் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள் எல்லோரும் கலந்துகலந்து சகோதரர்கள் போல் பல தொகுதிகளிலும் வாழ்கின்றனரெனினும், தேர்தல் காலத்தில் இனவெறி கிளம்பிச் சிறப்பாகச் சிறுபான்மையினரான தமிழருக்கே ஆபத்தாக முடிகிறதென்றால், அவர்கள் அமைதியாக வாழ முடியாமல், உயிருக்கும் உடைமைகளுக்கும் பெரும் ஆபத்து ஏற்படக்கூடியதாக இருக்கிறதென்பதையும் பார்க்கின்றோம். மலையகத்தில் முதல்முதலாக நுவரேலியாத் தொகுதியில் மூன்று மெம்பர்களில் ஒருவராக திரு. தொண்டமான் தெரிவுசெய்யப்பட்டதும், தோட்டப் பகுதித் தமிழர்களிடையே ஏற்பட்ட கஷ்டநஷ்டங்களும், சித்திரவதைகளும் கொஞ்சமல்ல. ஜனநாயகத்திலேயே தமிழருக்கும் சிறப்பாக மலையகத் தமிழருக்கும் நம்பிக்கை இவ்வாது போய்விட்டது.

அது மட்டுமல்ல, இனி இலங்கையில் உயிர் வாழவும் முடியாதென்று அஞ்சி, இந்தியாவுக்கே குடும்பத்துடன் திரும்பிவிட இங்கு பெரும் பாடுபட்டுப் பிரஜைகளான மலையகத் தமிழருங்கூட முடிவுசெய்துள்ளனராம். இலங்கை இந்தியர் பிரச்சினையைத் தீர்க்க இரு அரசுகளும் பல்லாண்டுகளாக முயற்சிசெய்து வந்திருக்கையில் தேர்தல் காரணமாக மலையகத் தமிழரை அடியோடு ஒழித்துவிட முயற்சிகள் நடந்துள்ளன.

ஒரு பக்கம் இலங்கைப் பிரஜையானவர்களை இந்தியா ஏற்றுக்கொள்ளாதென்று இந்திய ஹைகமிஷனர் அறிவிக்கிறார். இலங்கையிலிருந்து இனி உயிருடன் உழைத்துப் பிழைக்க முடியாதென்றும் தாங்கள் இனி இங்கு எதிர்காலத்தில் பத்திரமாகக் குடும்பத்துடன் இருக்கமுடியாதென்றும் கருதி 'இருதலைக்கொள்ளி எறும்பு'கள் போல் மலையகத் தமிழர்கள் தவிக்கிறார்கள்.

ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் போல் வாழ்ந்துவரும் இரு சமூகத்தவரும் இனிப் பூனையும் எலியும்போலத்தான் இருக்கவேண்டுமா? இன வெறி அடங்கி, மக்கள் அமைதியாக வாழ வழியுண்டா என்பதைப் பற்றி இந்நாட்டின் நலத்தில் அக்கறையுள்ள தலைவர்களும், சிறப்பாகத் தமிழ்த் தலைவர்களும் சிந்தித்து, நிதானமாகத் தீர்மானிக்கவேண்டியது மிக முக்கியமாகும்.

இந்நாட்டிலே மானத்துடனே அமைதியாக வாழ முடியுமென்றால், ஜனநாயக உரிமைகள் தங்களுக்குத் தொடர்ந்து கிடைக்குமென்ற உத்தரவாதம்ளிக்கப்பட்டால், இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்புபோலுள்ள உழைப்பாளிகளான இந்திய வம்சாவளித் தமிழர்கள் இந்நாட்டை விட்டுக் குடும்பத்துடன் வெளியேற முடிவு செய்யமாட்டார்கள். அப்படிச் சென்றவர்கள்கூடத் திரும்பிவிடவும் நினைக்கலாம். இப்போது நடந்துள்ளது இனக்கலவரம் அல்லவேயல்ல. பொதுத்தேர்தலைச் சாக்கிட்டு, அரசியல் வெறியர்களில் சிலரே இதைத் தூண்டிவிட்டுள்ளார்கள் என்பது மிகத் தெளிவு. மலையகத் தமிழரின் உழைப்பு இந்நாட்டுக்கு மிக அவசியமென்பதைச் சிங்களப் பொதுமக்களும், அரசாங்கமும் நன்குணர்ந்துள்ளதால் இந்தப் பிரச்சினைக்குச் சுமுகமான நியாயமான ஒரு முடிவைச் செய்ய வேண்டுமென்று ஆவல்கொள்வது இயற்கை.

எந்தப் பிரச்சினைக்கும் ஒரு நல்ல தீர்வு இருக்கவேசெய்யும். இருக்கவேண்டும். ஜனநாயகமென்னும் இந்த அரசியல் அமைப்பு முறையில் சிறுபான்மை மக்கள் நிம்மதியாக வாழ முடியவேண்டுமாயின் அவர்களது பிரதிநிதித்துவத்திற்குத் தக்க ஒழுங்குகள் செய்யவேண்டும். மீண்டும் பொதுத் தேர்தல் வந்தால் வெறியாட்டங்கள் கிளம்பித் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் ஆபத்து ஏற்படாமல் தடுக்க, ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்ள அரசியல் தலைவர்கள் தக்க ஒழுங்குகளைச் செய்வது அசாத்தியமல்ல.

நாடு அடிமைப்பட்ட காலத்தில் மலைநாட்டிலே சிங்கள மக்களின் நிலங்களைப் பறித்து, அவர்களுக்கு வேலையும் இல்லாமற்செய்து, அரசியல் உரிமையையும் தங்கள் பகுதியில் இல்லாமற்செய்வதாயின் அதைச் சிங்கள மக்கள் எவ்விதம் சகிக்கமுடியுமென்று ஒரு மலைநாட்டுச் சிங்களவர் உணர்ச்சியுடன் கூறினர். தங்களுக்குச் செய்யப்பட்ட அரசியல் பொருளாதார அநீதிகளை நீக்க வேண்டுமென்றும், குடியேறிய இந்தியத் தமிழர்களுக்கு அநீதி செய்யவேண்டுமென்பது தங்கள் நோக்கமல்ல என்று இரு சமூகங்களும் சேர்ந்து பரஸ்பர உதவியுடன் வாழக்கூடிய விதத்தில் தேர்தல் முறைகளை வகுக்க மேலான அரசியல் ஞானத்துடனும், தீர்க்க தரிசனத்துடன் மற்ற ஜனநாயக நாடுகளின் முன்மாதிரியைக் கண்டு காரியங்கள் செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டது. வீணாக மனமுடைந்து, ஜனநாயகத்தில் நம்பிக்கை இழக்கவோ நாட்டை விட்டு வெளியேறவோ அல்லது படுகொலைகள் செய்யவோ - வேண்டியதில்லை.

இந்நாட்டிலும் அரசியல் அனுபவம் மிக்கவர்கள் இருக்கவே செய்கின்றனர். மலையகத் தமிழரின் பிரதிநிதித்துவத்தை, போதிய ஸ்தானங்களை ஒதுக்குவதன் மூலமோ அல்லது வேறு வழிகளிலோ, தக்க ஏற்பாடுகளைச் செய்யலாம். அரசியல் பிரச்சினைக்கு, அரசியல் தீர்வையே காண வேண்டும். மனமுண்டானால் நிச்சயம் வழியுண்டு. அதைப் பற்றி இனி பார்ப்போம்.

(தொடரும்)

## இந்த இளைஞர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

வீதிகளில் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக சைக்கிளில் செல்லும் இளைஞர்கள் மீது பொலிஸாரின் கவனம் திரும்பியுள்ளது.

வீதிகளைத்தடை செய்ததாகவும் சைக்கிள்களில் அருகருகாகச் சென்றதாகவும் 10 இளைஞர்கள்வரை யாழ். பொலிஸார் கைது செய்தனர்.

நேற்றுமுன்தினம்காலை இவர்கள் யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. கே.வி நடரத்தினம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் இவர்களுக்கு 10 ரூபா முதல் 15 ரூபா வரை அபராதம் விதிக்கப்பட்டது. [க அ]

## ஜனவரி முதல் சம்பள உயர்வு

[கொழும்பு]

சகல அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார் ஊழியர்களுக்கும் 60 ரூபா சம்பள உயர்வு வழங்கப்படும் எனத் தெரிகிறது.

இச் சம்பள உயர்வு அடுத்த வருடம் முதல் அமுலுக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விசேட வாழ்க்கைச் செலவுப்படியாகவே இச்சம்பள உயர்வு வழங்கப்பட உள்ளது. [இ]

## திறப்புக் கோர்வைகள்

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க புடவை விற்பனைப் பகுதியில் விடுத்துச் செல்லப்பட்ட திறப்புக் கோர்வைகள் இரண்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் பெற்றுக்கொள்ளவும்.

## சிறைக்கைதி தப்பியோட்டம் முல்லைத்தீவில் சம்பவம்

(முல்லைத்தீவு)

12 வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் பாதுகாவலில் இருந்து தப்பியோடிவிட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் முல்லைத்தீவு சிறைச்சாலையில் நடைபெற்றுள்ளதாம்.

வி. சிவலிங்கம் (வயது 20) என்ற இக்கைதி கொக்குத்தொடுவாயைச் சேர்ந்தவராம்.

இவரது நெஞ்சிலும், தோள்புறத்திலும் வடுக்கள் காணப்படும் என்றும் 5 அடி 5 அங்குல உயரமுள்ள இவர் கருமை நிறமும் கட்டையாக வெட்டிய முடியும் கொண்டவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது (உ)

## சோஷலிஸ்ட் புரட்சிகருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

60-வது சோஷலிசப் புரட்சியின் நூற்றாண்டு ஞாபகார்த்தமாக இன்று கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ சார்பு) காரியாலயத்தில் கருத்துப் பரிவர்த்தனையும் கலந்துரையாடலும் நடைபெறும்.

விவாதத்தை திருவாளர்கள் அ. வைத்திலிங்கம், ஐ. ஆர். அரியரத்தினம், சி. சிவாகணேசன், டொமினிக் ஜீவா ஆகியோர் ஆரம்பித்துவைப்பர். (கூ)

...

## சமூகவியற் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

ஈழத் தமிழ் மாணவர் மன்றத்தின் முதலாவது சமூகவியற் கருத்தரங்கு இன்று மாலை வைத்தீஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இக்கருத்தரங்கிற்குத் தலைமைதாங்குவார்.

'விழாவில் "பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும்' என்னும் தலைப்பில் சமூகம் என்னும் விடயத்தில் யாழ். வளாகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸும், பொருளாதாரம் என்னும் விடயத்தில் யாழ். வளாக விரிவுரையாளர் திரு. மு. நித்தியானந்தனும், இனம் என்னும் விடயத்தில் யாழ்.வளாக மாணவன் திரு. மு. திருநாவுக்கரசுவும், பண்பாடு என்னும் விடயத்தில் யாழ் வளாகத் துணை நூலகர் திரு. நா. சுப்பிரமணியமும் உரையாற்றுவர். ... (கெ)

## வெள்ளம்: போக்குவரத்து துண்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தொடர்ந்து பெய்து வரும் பெருமழை காரணமாக புதுக்குடியிருப்பு பகுதியில் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் வீதிப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

நெத்தலி ஆற்றிலிருந்து பெருகிய வெள்ளம் புதுக்குடியிருப்பில் வீதியை மூடி ஓடுவதாலேயே சகல போக்குவரத்துகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. (இ)

## ஜீ. சி. ஈ. பாடத்திட்டம் மாற்றம்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர, சாதாரண பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை மாற்றியமைக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது என அறிவிக்கப்படுகிறது

இதற்கான புதிய பாடப் புத்தகங்களை விரைவில் கல்வி வெளியீட்டுத் திணைக்களம் வெளியிடும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது (இ)

## பனையில் இடி

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம் மேற்கு ஆலமேடையில் நேற்று நண்பகல் 12மணியளவில் பலத்த பெருமழையை அடுத்து பனைமரம் ஒன்றில் இடிவிழுந்து மரம் சேதமடைந்தது. [இ]

## புலோலி

(1ம்பக்கத் தொடர்ச்சி)

பேரில் கரையூரைச் சேர்ந்த ஜெயசீலன் என்பவரை யாழ். பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

நேற்று அதிகாலையிலேயே இவர் கைது செய்யப்பட்டார். [இ]

## இ.போ.ச.

[1ம்பக்கத் தொடர்ச்சி]

செய்யப்படுபவர்கள் இருவார பயிற்சியின் பின்னர் ஜனவரியில் நியமனம் பெறுவார்கள்.

இலங்கையில் பெண்களுக்கு பஸ் கண்டக்டர் நியமனம் வழங்குவது இதுவே முதற் தடவை என்பது தெரிந்ததே. (ம-இ)

## உயிரை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்.

சர்வதேசபாராளுமன்றச் சங்க கூட்டத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் நிலைகுறித்து திருத்தப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிக்கத்தாம் முயன்றதாகவும் ஒருநாட்டின் குழு இது போன்ற திருத்தப் பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டுமாயின் அந்நாட்டின் பிரதிநிதிகள் குழுவின் தலைவரின் கையொப்பம் அதற்கு வேண்டும் என்றும் இலங்கைக்குழுவின் தலைவராக புடவைக்கைத்தொழில் பிரதிஅமைச்சர் திரு. ஆர். எம். தர்மதாசபண்டா இருந்தமையால் தமது முயற்சி கைகூடவில்லை என்றும் பண்டிதர் கவலை தெரிவித்தார்.

தாம்சென்ற நாடுகள் எல்லாவற்றிலும் இலங்கைத் தமிழ்மக்களின் நிலை குறித்து விரிவாகதாம் எடுத்துக் கூறியதாகவும் அந்நாடுகளில் எல்லாம் தமிழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு நல்ல ஆதரவு இருப்பதாகவும் பண்டிதர் கூறினர் [ம இ]

## அரசியல்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மான முறையில் அரசியல் பழிவாங்கல் இடம்பெறவில்லை.

இவ்வாறு வவனியா தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு ரி. சிவசிதம்பரம் நேற்று முன்தினம் தேசிய அரசுப் பேரவையில் பேசுகையில் கூறினார்.

ஒத்திவைப்புப்பிரேரணையின் போது பேசிய அவர் மேலும் கூறியதாவது:

45 ஆசிரியர்கள் அரசியல் காரணங்களுக்காக இடமாற்றம் செய்யப்பட்டுள்ள அதே வேளையில் மேலும் 46 ஆசிரியர்களுக்கு அதே காரணங்களுக்காக இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது இதன் காரணமாக 39 மாணவர்களைக் கொண்ட பாடசாலை ஒன்று மூடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

இதுகுறித்துத்தாம் பரிசீலனை செய்வதாக கல்வி அமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன கூறினர். [ம இ]


## விளம்பரம்

14-11-77 திங்கட்கிழமை அன்று 127, ஸ்ரான்லி வீதியில் அமைக்கப்பட்டு இருந்த லங்கா ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி நீதவான் நீதிமன்ற வழக்கு இல. 406/77 உத்தரவு காரணமாக, தற்காலிகமாக, 17, மாட்டின் வீதியில் 14-11-77 திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதை சகல மாணவர்கள், விரிவுரையாளர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு அறியத் தருகின்றோம்.

Dr. A. V. இராசரத்தினம் / Dr. R. E. W. ஜெகோரத்தினம்
(முன்னாள் அதிபர்) (அதிபர்)


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389, Registerd as News paper in Sri Lanka.